Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo 20000 Rs only 1st Year
CIMA-UK 14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1052) MCS Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 09 வெள்ளிக்கிழமை (25.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 55




மரணத்தை ஏற்படுத்தும்

14



அரசின் வெற்று வாக்குறுதிகள்

08



களங்கத்தை ஏற்படுத்தாதீர்

06



13

உலகின் இறுதி நாள்

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச ஆலோசனை தேவையில்லை




## கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது எப்படி என்பது தொடர்பாக எந்தவொரு வெளிநாட்டு வழிகாட்டுதலும் தமக்குத் தேவையில்லை என பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் கொழும்பு சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நல்லிணக்கம் தொடர்பான தேசிய கருத்தரங்கில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

இறுதிக்கட்டப் போரின்போது படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டமை நிரூபிக்கப்பட்டால், குறிப்பிட்ட படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். (15 ஆம் பக்கம்பார்க்க)

## ரத்வத்த காலமானார்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தனது 73 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

இவர் தனது வீட்டில் கடந்த 21ஆம் திகதி இரவு வழுக்கி விழுந்து, படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தலையில் படுகாயமடைந்து நினைவிழந்த நிலையில் இருந்த இவருக்கு கண்டி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு நரம்பியல் நிபுணர்கள் சிகிச்சை அளித்து வந்த போதிலும், அவர் தொடர்ந்து நினைவிழந்த நிலையிலேயே காணப்பட்டார்.

இந்நிலையில், கண்டி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

(மானிப்பாய்)

கிணற்றில் விழுந்து ஐந்து வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

மானிப்பாய், கட்டுடைப் பகுதியைச் சேர்ந்த தங்கராசா துஷிகாந் (வயது-5) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் அயல் வீட் டிற்கு படிக்கச் செல்வதாகக் கூறிய சிறுவன் அங்கு செல்லவில்லை. ரியூசனுக்கு ஏன் தனது தம்பி வரவில்லை என சகோதரி தனது தாயாரிடம் கேட்டதை தொடர்ந்தே மாலை 5.30 மணி முதல் சிறுவனைப் பெற்றோர்கள் தேடியுள்ளனர். இரவு 7.00 மணியளவில் வீட்டின் பின்புறத்தில் பாழடைந்து காணப்பட்ட கிணற்றின் அருகே புத்தகத்தைக் கண்டு பார்த்தபோதே சிறுவன் (15 ஆம் பக்கம்பார்க்க)

## நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் நடப்பாண்டு மற்றும் அடுத்த வருடத்திற்கான செயற்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் பிரதான மண்டபத்தில் நேற்றைய தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அமைச்சின் கீழான தேசிய வடிவமைப்பு நிலையம் தேசிய அருங்கலைகள் (15 ஆம் பக்கம்பார்க்க)



## தேசிய மும்மொழிக்கொள்கை அடுத்த வருடம் நடைமுறையில்




### நிகழ்வில் அப்துல்கலாம் பங்கேற்பு

(கொழும்பு)

தேசிய மும்மொழிக் கொள்கை அடுத்து வருடம் நடைமுறைப்படுத்தப்பட உள்ள தா கவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேசிய மும்மொழிக் கொள்கை அங்குரார்ப்பண நிகழ்வில் (15 ஆம் பக்கம்பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த 5 முக்கியஸ்தர்களை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

தடை செய்யப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு சொந்தமான பணம், புலிகளிடம் வழங்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில், 5 பேரை கைது செய்வதற்கு, நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 5 முக்கிய செயற்பாட்டாளர்களை கைது செய்வதற்கு, கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது. இவர்களுள் ஒரு முக்கிய சூத்திரதாரி வெளிநாடு சென்றுள்ளதாகவும், தெரிய வருகிறது. அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கு, விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாக, இரகசிய பொலிஸார், நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

வழக்கு விசாரணை, எதிர் வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி மீண்டும் இடம்பெறுமென, மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி (15ஆம் பக்கம்பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்காது



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கவுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனமானது காலத்தை இழுத்தடிக்கும் அரசாங்கத்தின் தந்திரங்களில் ஒன்று எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கும் யோசனை தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள மக்கள் ஒரே நாட்டுக்குள் வாழும் வகையிலான அரசியல் மற்றும் அரசியல் அமைப்பு மாற்றங்களை செய்வது தொடர்பாக பரிந்துரைகளை முன்வைப்பதற்காகவே இலங்கை அரசாங்கத்தினால் இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளது

(15ஆம் பக்கம்பார்க்க)

## ஆணைக்குழுவின் அறிக்கை கருத்து வெளியிடப்படும்

### என்கிறது அவுஸ்ரேலியா



(சிட்னி)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடப்படும் என அவுஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டதன் பின்னர், அது தொடர்பில் அவுஸ்ரேலியாவின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கெவின் ரொட் தெரிவித்துள்ளார். ஆணைக்குழு அறிக்கை (15 ஆம் பக்கம்பார்க்க)

# யாழில் 10 வீதமானோருக்கு நீரிழிவு மருத்துவர்கள் அபாய அறிவிப்பு






(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சனத்தொகையில் சுமார் 10 வீதம் பேருக்கு நீரிழிவு நோயின் தாக்கம் இருப்பதாக ஆய்வுகளின் மூலமாக தெரியவந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நோயின் தாக்கம் குறித்து சரியான ஆய்வுகள் இதுவரை இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய கட்டாய நிலையில் மருத்துவத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் உள்ளனர்.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் நீரிழிவு நோயின் தாக்கம் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினத்தையொட்டி யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் விழிப்புணர்வு ஊர்வலமொன்றை யாழ். நகரில் நடத்தியது.

இதுதவிர நேற்றைய தினம் யாழ். நூல் நிலைய மண்டபத்தில் நீரிழிவு நோய் சம்பந்தமான தொடர்ச்சியான மருத்துவக் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வட மாகாணத்தைச் சேர்ந்த நீரிழிவு நோய் சம்பந்தமான வைத்தியர்கள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசா, யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் (நீரிழிவு) கே.நந்தகுமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் நீரிழிவு நோய் சம்பந்தமான வைத்திய நிபுணர்களின் விளக்கவுரைகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கும் மருந்துப் பொருட்கள் மற்றும் பால்மா வகைகள் குறித்தும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு தொடர்ச்சியாக இந்நோயின் தாக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (பா,எஸ்)

# சந்திக்கு சந்தி இளைஞர் கூட்டம் பொலிஸார் திடீர் நடவடிக்கை

(குருநகர்)

யாழ். நகரம் மற்றும் புறநகர் பிரதேசங்களில் சந்திகளில் கூட்டம் போட்டு நிற்போர் மீது பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக சந்திகளில் நின்று பல்வேறு சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற இளைஞர்கள் மீதே பொலிஸார் விசாரணை செய்வதுடன், அடையாள அட்டைகளைப் பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெருவோரம், சந்திகளில் நீண்ட நேரம் தங்கி நிற்கும் இளைஞர் குழுக்கள் காலக்கிரமத்தில் சாராயம், பியர் போன்ற மதுபானப் பொருட்களை அவ்விடங்களில் நின்று பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்கள் அரச அதிகாரிகள், கிராம அலுவலர், பொலிஸார் ஒன்றுகூடி ஒவ்வொரு பிரதேசங்களின் பொது மக்களுடனான கலந்துரையாடல்களை நடத்தி இருப்பதன் பயனாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது. (68)

# கொள்ளை முயற்சி முறியடிப்பு வல்வெட்டித்துறையில் சம்பவம்

(வடமராட்சி)


வல்வெட்டித்துறை கொம்பன் தரை மனோன்மணி அம்மன் ஆலய பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் அப்பகுதியிலுள்ள வீடொன்றில் நின்ற பெண்ணின் தாலிக் கொடியை அறுக்க முற்பட்ட சம்பவம் ஒன்று தோல்வியில் முடிந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் வசிக்கும் பெண்மணி ஒருவர் தனது மகளுடன் விழா ஒன்றுக்குச் சென்ற வேளை அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் அவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் அவர்களைப் பின்தொடர்ந்த நபர்கள் அவர்கள் வீட்டிற்குள் நுழைந்த போது அப்பெண்ணின் தாலிக் கொடியை அறுக்க முற்பட்ட சமயம் அப்பெண்மணியின் மகன் எதிர் நடவடிக்கையில் இறங்கிய போது அங்கு நின்ற இளைஞர்கள் திரண்டு அந்தத் திருடர்களை துரத்திச் சென்றனர்.

எனினும் திருடர்கள் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

# சுயதொழில் ஊக்குவிப்பு வேலணையில் செயற்திட்டம்



(தீவகம்)

"மைக்றோ" நிறுவனத்தின் உதவியுடன் வேலணை சாட்டிப் பிரதேசத்தில் 2 ஆம் கட்டமாக பாசி வளர்ப்புத் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்யும் வகையில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்கவும், ஆளுநரின் பணிப்புரைக்கமையவும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பிரதேசசபைத் தலைவர் சி.சிவராசா கலந்துகொண்டதுடன், இத்தொழிலின் ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (உ-85)

# மதுவரிச் சட்டத்தை மீறிய வர்த்தகர்கள் அதிரடிச் சோதனையில் வசமாக சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

மதுவரிச் சட்ட விதிகளை முறையாகப் பின்பற்றத் தவறிய வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். மதுவரித் திணைக்களம் கடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தச் சட்ட விதிகளை மீறிய வர்த்தகர்கள் பலருக்கு எதிராக ஏற்கனவே பல வழக்குகளும் மதுவரித் திணைக்களத்தால் தொடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மதுவரி நிலைய மதுவரி பரிசோதகர்களால் யாழ். நகரப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே விற்பனை நிலைய உரிமையாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பான வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும் 4 வியாபாரிகள் முதியவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக மதுவரி நிலைய அதிகாரி கிருபாகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகையிலை மற்றும் மதுபானங்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த நடவடிக்கை தொடரும் என்றும் தெரிவித்தார். (எஸ்)

## கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்தல்

கட்டாக்காலியாக மாநகர சபை வீதிகளில் திரியும் கால்நடைகளைப் பிடித்தல் சம்பந்தமாக 12.11.2011 ஆம் திகதி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக கீழ்வரும் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கை 27.11.2011 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது எனப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

27.11.2011 ஆம் திகதி முதல் நல்லூர் வட்டாரத்திலும்,
28.11.2011 ஆம் திகதி முதல் வண்ணார்பண்ணையிலும்,
29.11.2011 ஆம் திகதி முதல் நாவாந்துறையிலும்,
30.11.2011 ஆம் திகதி முதல் குருநகர் I,II பகுதிகளிலும்,
01.12.2011 ஆம் திகதி முதல் பாஷையூரிலும்,
02.12.2011 ஆம் திகதி முதல் அரியாலையிலும்,

கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு 10 நாட்களுக்கிடையில் அவற்றின் உரிமையாளர்கள் தண்டப்பணம் செலுத்தி அவற்றை எடுத்துக் கொள்ளத் தவறுவார்களேயானால் பத்திரிகைகள், பொது அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்திய பின் சபை முதல்வர், ஆணையாளர், வருமானப் பரிசோதகர் முன் பகிரங்க ஏலத்தில் விடப்படும். கால்நடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் அன்றைய தினமே முழுப்பணத்தையும் செலுத்தி அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திருமதி. யோ.பற்குணராசா
முதல்வர், மாநகரசபை
யாழ்ப்பாணம். (C/1098)

# ஹெரோயின் பாவனை யாழ். நகரில் அதிகரிப்பு

யாழ். நகரில் ஹெரோயின் பாவனை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன் வெளிப்பாடாக ஹெரோயின் பாவனையில் ஈடுபடுவர்களும் அவற்றை விற்பனை செய்பவர்களும் பொலிஸாரிடம் சிக்கிக் கொள்ளும் சம்பவங்களும் யாழ். நகரில் இடம்பெற்று வருகின்றன.

யாழ். பெருமாள் கோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரின் வழக்கமான ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கையின் போது ஹெரோயின் பாவனையில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். உடனடியாக இவர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இந்த இருவருக்கு எதிராகவும் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இவ்வழக்கு விசாரணையின் முடிவில் மேற்படி இருவருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (எஸ்)

## சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)

# புதிய இறங்குதுறை பணிகள் ஆரம்பம்



(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபைக்கு உட்பட்ட இறங்குதுறை புதிதாக அமைக்கப்படவிருக்கிறது. இவ்விறங்குதுறையானது நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கும் அவர்களது தேவையை பூர்த்தி செய்வதற்குமாக அமைக்கப்படுகின்றது.

இவ் இறங்குதுறையின் கட்டுமானப் பணிக்கான வேலை நேற்று ஆரம்பமாகியது. இவ்வேலைத்திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் பணிப்புரைக்கமைய ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (85)

உண்மை உயர்வை அளிக்கும். பொய்மை உயர்வை அழிக்கும். அன்பு துன்பத்தைக் குறைக்கும். செல்வம் துன்பத்தைப் பெருக்கும்.

- சத்தியா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## ஊடகங்களும் தலைவர்களும்!

"தமிழ்மக்களின் பிரச்சினையில் அரசு இணக்கம் தெரிவித்த எதனையும் அமுல் செய்தது கிடையாது. தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டே வந்துள்ளார்கள். தமிழினம் மிகவும் பலவீனமான நிலையில் இருந்து கொண்டு மிகவும் பலமான, தந்திரமுள்ள அரசுடன் பேச்சு நடத்தி வருகிறோம் என்பதனை மறந்து விடலாகாது. பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசு கடைசிவரை சிங்கள மக்கள் எதிர்க்கும் ஒரு தீர்வைக் கொண்டு வரப்போவதில்லை. தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள் வழங்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்து தென்னிலங்கை இம்மியளவும் நகரவில்லை. இனியும் நகரப் போவதில்லை. தெரிவுக்குழுவினூடாக இறுதித் தீர்வு தயாரிக்கப்பட்டு நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது தமிழ் மக்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும். ஆதலால், என்ன செய்ய வேண்டும் என்ற வியூகத்தை கூட்டமைப்பு இப்போதே வடிவமைத்துக் கொள்ள வேண்டும்"

இதுதான் தமிழ்த் தீவிரவாதத் தேசிய ஊடகங்கள் கூட்டமைப்புக்கு இன்று வழங்கும் அறிவுரை. எனில், இவர்களை நம்பித் தமிழ் மக்கள் எக்காலத்தில் மீளுவது?

என்னத்தைக் கன்னையாதான் திரும்பவும் ஞாபகம் வருகிறார். "இதொண்டும் சரிவராது" என்று முனுமுனுத்தபடியே போய்ப் பேசி என்ன முடிவைத்தான் எடுப்பது?

பழைய வரலாறுகள் எல்லாம் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறுகளாகவே இருப்பதை உடனே சொல்லி விடுகிறார்கள். சரி, அதிலிருந்தாவது நாம் படிக்க வேண்டியதை உணரக் கூடாதா? உணர்ந்து புதுவழி காணக்கூடாதா? அவர்கள் எப்போதும் ஏமாற்றிய படியே தான் இருக்கிறார்கள். நாங்களும் ஏமாந்த சோணகிரிகளாகத் தான் இருந்து வருகிறோம் என்றால் என்ன பொருள்?

இம்முறையும் அவர்கள் ஏமாற்றவே நினைப்பார்கள். நாங்கள் அதற்கு இடங்கொடாமல் தகுந்த வியூகம் அமைத்துக்கொண்டு போய் குழப்பிவிட்டு வந்துவிடவேண்டும் என்று புத்திமதி சொல்லி அனுப்புகிற 'தமிழ் அறிவை' எங்கு கொண்டு போய் மெச்சுவது?

இப்படியே குழப்பிக் குழப்பித்தானே எதையும் பெற முடியாமல் ஏமாற்றமடைந்து கொண்டிருக்கிறோம் என்ற எளிய உண்மை கூடவா எம் புத்திக்கு எட்டாமல் போகும்?

சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 31 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு பங்கேற்காது எனச் சொல்லிவிட்டது. அதற்கும் பழைய வரலாற்றிலிருந்து அவர்களால் படித்துக் கொள்ள முடிந்த பாடம்தான் துணை செய்திருக்கிறது. காலத்தை இழுத்தடிக்கும் இலங்கை அரசாங்கத்தின் தந்திரங்களில் ஒன்றாம் இது! 'தமிழ் மூளை' இந்த மோ.சி.களின் தந்திரங்களில் மாட்டுப்படுமா என்ன? தப்பிவிட்டது!

யாருக்கு நட்டம்? எந்த மக்கள் தொடர்ந்தும் அவல நிலைக்குள்ளும், அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமலும் காலந் தள்ளப்போகிறார்கள்? மீண்டும் இந்தத் தீவிரவாதிகள் மறைமுகமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் மாயமந்திரம் என்னவென்றால், "இப்படியே இலங்கை அரசாங்கத்துடன் பேச முடியாது என்பதைக் காட்டிக் கொண்டிருந்தால், இந்தியாவோ அமெரிக்காவோ ஐநாவோ வந்து சிங்கள அரசிடமிருந்து தீர்வைப் பறித்து நம் கைகளில் தந்துவிட்டுப் போகும்" என்பதைத்தான்.

என்ன மாதிரியொரு முட்டாள்தனம் இது? இப்படியொரு 'வழி நடத்தலில்', மக்களை வாய் திறந்து அண்ணாந்து பார்த்திருக்க வைக்கும் தலைவர்களும் ஊடகங்களும் தானா இந்தப் புத்திசாலிச் சமூகத்துக்கு வாய்த்தார்கள்?

இந்தியாவும் அமெரிக்காவும் ஐநாவும் இன்னுமின்னும் சர்வதேச சமூகங்கள் எல்லாம் என்ன சொல்கின்றன? உங்கள் அரசுடன் பேசுங்கள் என்பதைத்தான். இவர்கள் என்ன காட்ட நினைக்கிறார்கள்? இப்படியே அரசுடன் பேசிப் பேசி, பேச்சுச் சரிவராது என்று காட்டிக் கொண்டிருந்தால் என்றாவது ஒருநாள் வெளிநாடுகள் எமக்காக வந்திறங்கும் என்பதைத்தான்.

இது எண்பதுகளிலேயே, 'மரம் பழுத்தால் பறவை வரும்,' என்று கதை விட்டுக் கொண்டிருந்த 'வண்ணை'களின் விண்ணாணம் தான்! அல்லது எதுவோ அழுகி விழும் என்று பின்னால் போய்க் கொண்டிருந்த பிராணியின் கதைதான்! இந்தக் கதைகளையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பவர்களை விலக்கி, மக்களும் 'ஞாயம்' விளங்கியவர்களும் வாய் திறந்தாக வேண்டும். நடக்கக் கூடிய அலுவலைக் கவனிக்க வேண்டும்.

– ஆசிரியர்

# விசர்நாய்க்கடி மரணங்கள் 2016 இல் முற்றாக ஒழிப்பு



(கொழும்பு)

விசர் நாய்க்கடியை முற்றிலும் ஒழிக்க முடியும் 2016 ஆம் ஆண்டளவில் நாடடில் இது முற்றாக ஒழிக்கப்படவுள்ளது.

விசர் நாய்க்கடியால் ஏற்படுகின்ற மரணங்கள் தற்போது குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் கால்நடைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பீ.ஏ.எல். ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

விசர் நாய்க்கடியினால் இந்த வருடம் 32 பேர் உயிரிழந்துள்ளனா.

கடந்த வருடத்தில் விசர் நாயக்கடியினால் 49 மரணங்கள் சம்பவித்துள்ளன.

மக்களைத் தெளிவுபடுத்துவ தறகு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டமை மற்றும் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல் ஆகிய திட்டங்களே இதற்குக் காரணம். கட்டாக்காலியாக வளர்க்கப்படும் நாய்களுக்கு உரிய முறையில் தடுப்பூசி ஏற்றுவதில் அசௌகரியம் நிலவுகின்றது.

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு உரிய முறையில் தடுப்பூசி ஏற்ற அவற்றின் உரிமையாளர்கள் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசத்துரோகிகளாக அறிவிக்கப்பட்டோர் தேசிய வீரர்களாக கௌரவிக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

தேசத்துரோகிகள் என்று இலங்கையில் 1818 ஆம் ஆண்டு அரசின் வர்த்தமானியில் பெயரிடப்பட்டோரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய வீரர்களாக அறிவிக்கவுள்ளார்.

1818 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக ஊவா-வெல்லஸ்ஸவில் கிளர்ச்சி செய்த 177 பேரே வீரர்களாக அறிவிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய வீரர்களாக பிரகடனம் செய்யப்படவுள்ளனர்.

நூற்றாண்டு பழைமையான வர்த்தமானியில் இவர்கள் அனை வரும் தேசத்துரோகிகள் என்று பிரித்தானியர்களால் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் அப்போதைய ஆளுநராக இருந்த சேர். றொபேட் பிறவுணிங் இவர்களைத் தேசத்துரோகிகளாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

அத்துடன், இவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் உத்தரவும் அதில் வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது தேசிய வீரர்களாக அறிவிக்கப்படவுள்ள 177 பேரினதும் குடும்பங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்கள், பற்றிய விபரங்களுடன் '1818 சுதந்திர புரட்சியின் முன்னோடிகள்' என்ற நூலும் இன்று வெளியிடப்படவுள் ளது.

## சுயதொழில் கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் யாழ். மாவட்டப் பயனாளிகளுக்கான பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு காங்கேசன்துறை வீதி கோண்டாவிலில் (தாவடிச்சந்தியில்) அமைந்துள்ள வேதபாராயணம் சன சமூக நிலைய கட்டிடத்தில் இடம்பெறவுள்ளதாக பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ)

## தெற்கின் அதிவேக நெடுஞ்சாலையில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தத் தடை



(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் இரு மருங்கிலும் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தத் தடை செய்யப்பட்டுள்ளது.

வாகனச் சாரதிகளின் கவனம் திசை திருப்பப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் நிருமல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அதிவேக வீதியின் இரு மருங்கிலும் 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்த இடமளிக்கப்படமாட்டாது அத்துடன், எந்தவொரு காரணத்திற்காகவும் வீதியின் நுழைவாயில்களுக்கு அருகில் விளம்பரங்களைக் காடசிப்படுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது.

விளம்பரங்கள் காரணமாக வாகனச் சாரதிகளின் கவனம் சிதறிவிடாமல் இருப்பதற்காகவும், உயிர் அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெல்லியடிப் பொலிஸாரினால் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற இச்செயற்பாடுகளில் நெல்லியடிப் பொலிஸார், கரவெட்டிச் சுகாதார உத்தியோகத்தர் யோகலிங்கம், வெளிக்கள உத்தியோகத்தர் பி.திருச்செல்வம் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நெல்லியடி, கரவெட்டி, கரணவாய் உட்பட்ட கிராமங்களில் இதுவரை 25 பேருக்கு மேற்பட்டவர்கள் மீது டெங்கு சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று, அவர்களுக்கு குற்றப்பணம் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டது என பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

டெங்கு பரவுவதைத் தடுக்கும நடவடிக்கைகளை நெல்லியடிப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும், டெங்கிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் முகமாக கிராமசேவையாளர் ஊடாக கிராமப் பாதுகாப்பு குழுக்களுடன் சேர்ந்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தி கிராமங்களையும், வீடுகளையும் சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

## 8 வருடமாகப் புனரமைக்கப்படாத ஊர்காவற்துறை காம் வீதி

(தீவகம்)

ஊர்காவற்துறை காம் வீதி பலத்த சேதமடைந்த காணப்படுவதால் இவ் வீதியூடான போக்குவரத்துக்கள் தற்போது சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

8 வருடங்களாக புனரமைக்கப்படாமல் உள்ள இவ்வீதி தற்போது குண்டும் குழியுமாகச் சேதமடைந்துள்ளதால் இவ் வீதியால் பயணிப்போர் தாம் பல இடையூறுகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வீதியூடாக நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், அலுவலர்கள் எனப் பலர் பயணம் செய்து வரும் நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள மழையினால் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுவதாகவும், குறிப்பாக மாணவர்கள் இதனால் அதிகளவில் சிரமங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயத்தினை கருத்திற்கொண்டு இவ் வீதியைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (உ-85)

# தவிசாளரின் தான்தோன்றித் தனத்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

(கோப்பாய்)

வலி. கிழக்கு பிரதேச சபையின் ஆளும் கூட்டமைப்புக் கட்சியினரின் செயற்பாடுகளை ஆட்சேபித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், கடந்த 14ஆம் திகதி காலை 10.00 மணியளவில் வலிகிழக்குப் பிரதேச சபையின் கூட்டம் தவிசாளர் அ. உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஆர். ஜங்கரன் உரையாற்றும் போது சபையில் குழப்பமேற்பட தவிசாளர் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்கள் ஒத்திவைத்தார். மீண்டும் சபை கூடியபோது முன்னர் இடம்பெற்ற கூட்டத்தில் தவிசாளர் தலைமையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறவேண்டும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சென்ற கூட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். எதிர்க்கட்சிகள் எதிர்த்த தீர்மானம் எவ்வாறு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிட முடியும் என கேள்வி எழுப்பினர்.

அதற்கு தவிசாளர் பதிலளிக்கையில், தனக்கு அதிகாரம் இருப்பதாகவும், நினைத்தால் அவ்வாறு செய்யலாம் என்றும் கூறினார். இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (135)

# குடும்ப அட்டைகளை பதிவு செய்யும் செயற்பாடு

(குருநகர்)

வண்ணார்பண்ணை வடமேற்கு ஜே/98 கிராம அலுவலர் பிரிவு வீடுகளுக்குச் சென்று குடும்ப அட்டைகளைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதிவு செய்து வருகின்றனர்.

இவ்விதம் பதிவை மேற்கொள்ளும் பொலிஸார், மேலும், திருடர் மற்றும் அச்சுறுத்தல்களின்போது தம்முடன் தொடர்பு கொண்டு தெரிவித்தால் உடனடியாக அவ்விடங்களுக்கு வருகை தந்து மக்களுக்கு உதவுவதாகவும் தெரிவித்து வருகின்றனர்.

அதற்கான தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் ஒவ்வொரு பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதன் காரணமாகப் பொதுமக்கள், பொலிஸார் நல்லுறவு ஏற்படவும் வாய்ப்பேற்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (68)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/68 கிராம சேவையாளர் பிரிவு மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஜே/68 தொடர்மாடி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு மாநகர சபை முதல்வர் அறிவித்துள்ளார். (உ)

## அரிசியின் விலை திடீர் உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அரிசியின் விலை திடீரென அதிகரித்துள்ளது. தற்போது பெய்துவரும மழையை அடுத்தே அரிசியின் விலை திடீர் அதிகரிப்புக்குக் காரணம் என்று அரிசி ஆலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதில் அரிசி கிலோவுக்கு 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. யாழ். நகர வர்த்தக நிலையங்களிலும் நாட்டு அரிசி கிலோவுக்கு ஐந்து ரூபாவால் அதிகரித்து தரத்திற்கு ஏற்ப 70 முதல் 75 வரை விற்கப்படுகின்றன. (வி)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பார்சிக் நிறுவனத்தினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மீள்குடியமர்ந்த 12 பேர் கொண்ட குடும்பத்தினருக்கு கடற்றொழில் உபகரணங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளது.




காரை நகர் ஜே/48 அம்பாள் கடற்றொழில் கூட்டுறவு சங்க கேட் போர் கூடத்தில் காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான வள்ளம் மற்றும் மீன்பிடி வலைகள், தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.கட்சியின் காரைநகர் அமைப்பாளரும் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன், பார்சிக் நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ். பிரபா, கிராம சேவையாளர்களான திருப்புகழூர், சிங்கம், எஸ். சுமந்திரன் மற்றும் அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் க. இராஜேந்திரன், கடற்றொழில் பரிசோதகர் செல்வி ரி. தயாளினி, யாழ். மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ. ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

## நடமாடும் சேவை

(வவுனியா)

வவுனியாவில் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் கீழ் நடமாடும் சேவை ஒன்று நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இந்த நடமாடும் சேவையை தேசிய மொழி ஒருங்கிணைப்பு அமைச்சு நடத்தியது. இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டை, திருமணப் பதிவு, வயோதிபர் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், மரண சான்றிதழ் என்பன வழங்கப்பட்டது.

மேலும் இந்த நடமாடும் சேவையில் அனைத்து வேலைகளும் இலவசமாக வழங்கப்பட்டதுடன் இதில் நூற்றுக்கணக்கான பொது மக்களும் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(125)

## இந்தியக் கலைஞர்களின் படைப்பில் சாப விமோசனம் நாட்டிய நாடகம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். இந்தியத் உயர்ஸ்தானிகராலய அலுவலகமும் இணைந்து வழங்கும் இந்திய கலைஞர்களின் படைப்பான சாப விமோசனம் நாட்டிய நாடக அளிக்கை எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகவும் யாழ். இந்திய உயர்ஸ்தானிகர் வி. மகாலிங்கம், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். வடமாகாணத்தில் முதல் முதலாக இந்தியக் கலைஞர்களின் படைப்பான இந்நாட்டிய நாடக நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கண்ணிவெடி அபாயக்கல்வி மாணவர் மட்ட போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

யுனிசெவ் ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக வலிகாம கல்வி வலயத்தினூடாக கண்ணிவெடி அபாயத்தைப் பெருமளவு எதிர்நோக்கும் பாடசாலைகளுக்கிடையே விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்பட்ட கண்ணிவெடி அபாயக் கல்விப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விரபம் வருமாறு:

**கட்டுரை**

தரம் 1 -3

கு. மேரிசங்கீதா (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.), இ.தீபிகா (பொன்னாலை வரதராஜப்பெருமாள்), த. அபிராமி (தந்தை செல்வா தொ.நி.பள்ளி),

தரம் 4-5 :

கே. குந்தவி (மகாஜனாக் கல்லூரி), சி. அனிஸ்ரிகா (கட்டுவன்புலம் ம.வி), அ. அனற்சாருகா (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க)

தரம் 6-9 :

யே. சிபோறினி (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.), இ. பபிதினி (இளவாலை மெய்கண்டான் ம.வி), பி. கீர்த்திகா (நடேஸ்வராக் கல்லூரி)

தரம் 10 -11 :

சி. லங்ஜெய ரூபிகா (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.), ம. கோகுலசாயி (யூனியன் கல்லூரி), சி. நிதர்சனா (கீரிமலை நகுலேஸ்வரா)

தரம் 12 - 13 :

நா. பவித்திரா (இளவாலை மெய்கண்டான் ம.வி), சொ. தருமதன் (யூனியன் கல்லூரி), க. யருஷனா (மகாஜனாக் கல்லூரி)

**சித்திரம்**

தரம் 1-3 :

சு. பிரவீன் (கட்டுவன்புலம் ம.வி), ம. கபிலாஷ் (ஏழாலை வடக்கு அ.மி.த.க.பா.), றெ. நிவிஜா (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.)

தரம் 4-5 :

இ. ரிசாந் (மகாஜனாக் கல்லூரி), பா. லக்ஷியன் (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.), மு. டெல்சன் (மயிலிட்டி வடக்கு கலைமகள்)

தரம் 6-9 :

ர. கஜீபன் (மயிலிட்டி வடக்கு கலைமகள்), றெ. யோன்பற்றிக் (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.), க. கோகுல் (மகாஜனாக் கல்லூரி)

தரம் : 10-11

ம. கனுஜா (மயிலிட்டி வடக்கு கலைமகள்), அ. சுபீட்சகன் (பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க.), பா. தினேஸ் (யூனியன் கல்லூரி)

தரம் 12-13 :

ப. பிரசாந் (யூனியன் கல்லூரி) (தொடரும்) (06)

# மின்சாரம் இல்லாத வேளையில் எரிபொருளை பெறுவதில் சிரமம்

(அச்சுவேலி)

வலி. கிழக்கு அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் அச்சுவேலியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மின்சாரம் இல்லாத வேளைகளில் எரிபொருள் நிரப்ப முடியாது வாகனச் சாரதிகள் திரும்பிச் செல்லும் நிலை தொடர்ந்தும் காணப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மக்களிற்கு சேவை வழங்கும் நோக்கில் நிறுவப்பட்ட இவ் எரிபொருள் நிலையத்தில் மின்சாரம் இல்லாத வேளைகளில் மாற்று ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படாது வாகனங்கள் எரிபொருள நிரப்ப முடியாது திரும்பிச் செல்வது வழமை நிலையாக இருந்து வருகிறது. இதனால் அப்பகுதி வாகனங்களின் உரிமையாளர்கள் பல கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள நெல்லியடி மற்றும் சிறுப்பிட்டிப் பகுதிகளில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் வாகனச் சாரதிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (03)





நல்லூர் மத்தியஸ்தர் குழு உறுப்பினர்கள் 16 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்றில் சமாதான நீதவான்களாகச் சத்தியப்பிரமானம் செய்து கொண்ட நிகழ்வில் யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அ. பிரேம்சங்கர் தவிசாளர் நா. நித்தியானந்தனிடம் சத்தியபிரமான கடிதத்தைக் கையளிப்பதையும், சத்தியப்பிரமானம் செய்துகொண்ட உறுப்பினர்களையும் காணலாம். (எஸ்)

# வாசிப்புத்திறனை வளர்த்துக்கொள்ள நூலகங்களை பயன்படுத்த வேண்டும்

## வலிகிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி

(அச்சுவேலி)

ஒவ்வொரு மாணவரும் தாமாகவே முன்வந்து நூலகங்களை பயன்படுத்த பழிகிக் கொள்ள வேண்டும். வாசிப்பு என்பது தேடலின் வழிகாட்டி எனவே வாசிப்பதன் மூலமே அறிவுத் தேடலை பெற்றுக் கொள்ள முடியும் என வலி கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலப் பொறுப்பதிகாரி எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஆவரங்கால் விஷ்ணு வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி மாணவர்களின் சுற்றாடல் முகாம் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பாடசாலைப் பருவம் வாழ்க்கையில் ஒரு முறைதான் கிடைக்கிறது. இப்பருவத்தை பிள்ளைகள் பயன் மிக்கதாக்கிக் கொள்வதற்கு கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது வாசிப்பதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தற்காலத்தில் கிராமங்கள் தோறும் பிரதேச சபைகளின் நூலகங்கள் இயங்கிவருகின்றன இவற்றில் மாணவர்களுக்கென ஏராளமான நூல்கள் உள்ள போதிலும் மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்தும் அளவு மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இந்நிலை மாறவேண்டும் பாடசாலை நூலகங்களைப் பயன்படுத்துவது போன்று மாணவர்கள் அனைவரும் பிரதேச நூலகங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சுயதேடலுடனான கற்றலுக்கு நூல்கள் என்றைக்குமே துணையானவை என்பதைப் புரிந்து கொண்டு மாணவர்கள் தமது வாசிப்புத் திறனை மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

(03)

# நெற்பயிரை பாதுகாக்க முட்கம்பி வேலி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமத்தில் நெல்பயிரிடப்பட்ட வயல் நிலங்களைச் சூழ முட்கம்பி வேலியிடும் நடவடிக்கையில் அப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டிருக் கின்றனர்.

இவ்வருடம் கால போகத்தின் போது விதைப்பிற்குட்பட்டிருக்கும் இவ்வயல் நிலங்கள் அங்கு நடமாடித்திரியும் கால் நடைகளின் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருப்பதன் காரணமாகவே வயல் நிலங்களைச் சூழ முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டைவிட அதிக அளவான நெற்பயிர்ச்செய்கை இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் நெற்பயிர்களைக்காக்கவென அரச மற்றும் தனியார் துறையிடம் முட்கம்பி வேலியிடுவதற்கு உதவும்படி அப்பகுதி விவசாய அமைப்பு கோரிக்கை விட்டிருந்தது.

இதற்கமைவாக மண்டைதீவு மக்கள் ஒன்றியம் (சுவீஸ்) குறித்த வயல் நிலங்களைச் சூழ முட்கம்பி வேலியிடுவதற்காக முட்கம்பித்தொகுதியையும் கொங்கிறிற் தூண்களையும் கொள்வனவு செய்து வழங்கியிருக்கின்றது.

இவற்றைக்கொண்டு விவசாயிகள் வயல் நிலங்களைச் சூழ முட்கம்பி வேலிகளை அமைத்து வருகின்றனர்.

தற்சமயம் குடா நாட்டில் பெய்து வரும் மழையானது நெற் பயிர்ச் செய்கைக்கு சிறிது பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததன் காரணமாக விதைப்பிற்குள்ளாகிய வயல் நிலங்களில் விதைநெல் முளைக்காது போயிருந்ததால் விவசாயிகளால் மீள் விதைப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

(பா)

# குப்பை கூழங்களைச் சேகரிக்கும் ஊழியர்களால் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர், பிரதேச சபைக்குட்பட்ட வீடுகளில் குப்பை, கூழங்களைச் சேகரிக்கச் செல்லும் ஊழியர்கள் வீடுகளில் உள்ளவர்களிடம் பணம் பெற்று குப்பைகளைச் சேகரிப்பதாக பிரதேச சபைக்கு மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் 4ஆவது கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது வீடுகளில் இவ்வாறு பணம் பெற்றுக்கொள்பவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ. ரவீந்திரதாசன் பல பிரேரணைகள் முன்வைத்தார். பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் புனரமைக்கப் படும்போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, மணியந்தோட்டம், பூம்புகார், அரியாலை கிழக்கு, நாவலடி, உதயபுரம் பகுதிகள் இதில் அடக்கப்பட வேண்டும்.

மேலும் தச்சுவேலை செய்பவர்களுக்கு அவர்களுக்கான சலுகைகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொடுத்து நிரந்தரமான ஊழியராக நியமிக்கப்படவேண்டும் என பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டது. பிரதேச சபையினால் மேற்படி பிரேரணை ஏற்றுக்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது(எஸ்)

# வைத்தியர்கள் கடமையில் இல்லாததால் சிகிச்சை பெறமுடியாத அவலநிலை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர்கள் இன்மையால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் சிகிச்சையைப் பெறமுடியாது திரும்பிச் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக நோயாளர்களும், பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களின் பின்னர் மக்கள் மீளக் குடியேறியுள்ள நிலையில் இப்பிரதேச வைத்திய சாலை சீராக இயங்கி வந்தது.

எனினும் தற்போது இவ்வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த வைத்தியர்கள் உயர் கல்விக்காக சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதுடன் இதற்குப்பதில் வைத்தியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவர்கள் சரியான முறையில் கடமைக்கு வருவதில்லை என நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களும், வெளியிடங்களிலிருந்து வரும் நோயாளர்களும் சிகிச்சைபெற்றுவரும் நிலையில் இவ்வாறு வைத்தியாகள் இல்லாமல் இருப்பதால் உரிய முறையில் சிகிச்சையைப் பெறமுடியாது தாம் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் மற்றும் விபத்துக்களில் காயமடைந்த நோயாளர்கள் இங்கு வந்து திரும்பி வேறு வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து நோயாளர்கள் சிரமமின்றி சிகிச்சையை, பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு நோயாளர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

(77)

# அபிவிருத்திக் கலந்துரையாடல்

(தீவகம்)

ஊர்காவற்துறை பிரதேச சபை அபிவிருத்தியின் களநிலவரம் தொடர்பான கூட்டம் கடந்த 19 ஆம் திகதி பிரதேச சபையில் நடைபெற்றது.

வடமாகாண பிரதம செயலாளர் சிவசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊர்காவற்துறை வீதிகளின் அபிவிருத்தி, பிரதேசத்தின் நன்னீர்த் திட்டத்திற்கான குளங்கள் புனரமைப்பு மற்றும் கட்டாக்காலி கால்நடைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் ஊர்காவற்துறைப் பிரதேச செயலர், சபை உறுப் பினர்கள், சபை முக்கியஸ்த்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-85)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(25.11.2011 –வெள்ளிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 09 ஆம் நாள்.
இராகுகாலம் 10.42-12.12, சுபநேரம் 6.12 -7.42 வரை
நட்சத்திரம்: அனுஷம் பி.இ . 2.43 வரை
திதி: அமாவாசை பி.ப. 12.35 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் வரும், சுற்றத்தார் ஆதரவு, மேலதிகாரி பாராட்டு, நண்பர்வருகை, தேக ஆரோக்கியம்.

ரிஷபம:–புதுப்பொருள் சேரும், பணக் கஷ்டம், தொழில் முன்னேற்றம், திடீர் பயணம், தேக சுகவீனம்.

மிதுனம் :–பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியசித்தி, சுப காரியப் பேச்சு, திடீர் அதிர்ஷ்டம்,

கடகம்:– சுற்றத்தார் ஆதரவு, பணக் கஷ்டம், நண்பர் உதவி, வெளிநாட்டிலிருந்து நற்செய்தி, தேக ஆரோக்கியம்.

சிம்மம்:– பணம் வரும், குடும்பத்தில் அமைதி, சுபகாரியப் பேச்சு, வீண் வாக்கு வாதம், உடம்பு சுகம்.

கன்னி :– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணக் கஷ்டம், நண்பர் உதவி, காரியசித்தி, தொழில் இலாபம்.

துலாம் :–பணக்கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, நண்பர் வருகை, திடீர் பயணம், உடம்பு பலவீனம்.

விருச்சிகம்:–குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், சகோதர பாசம், காரிய சித்தி, தேக ஆரோக்கியம்,

தனுசு:– பணக் கஷ்டம், குடும்பத்தில் அமைதி, வாய்ப்பு நழுவிப் போதல், வெளிநாட்டிலிருந்து நற்செய்தி,

மகரம:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், காரிய சித்தி, உடம்பு நற்சுகம்.

கும்பம் :– பணக் கஷ்டம், வெளிநாட்டிலிருந்து துக்கசெய்தி, தொழில் இலாபம், தேக ஆரோக்கியம்

மீனம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் தொழில் ஆதாயம், உடம்பு நற்சுகம், தெய்வதரிசனம்.

# கோப்பாய் இராச வீதி துரிதகதியில் புனரமைப்பு

(கோப்பாய்)

கோப்பாய் இராச வீதியின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

வீதியில் சேதப்பட்ட பகுதிகளுக்கு தார்க் கலவை மூலம் நிரப்பப்பட்டு அவை சீர்செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வலி. கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந்தப் புனர் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம் கோப்பாய் பொலிஸ நிலையத்திற்கு அண்மையில் வீதியில் காணப்பட்ட பெரிய அளவிலான குழிகள் சிமெந்துக் கற்களால் நிரப்பப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதியில் காணப்பட்ட வெள்ளமும் இவ் வீதிப் புன ரமைப்பால் அகற்றப்பட்டுள் ளன.

இது இவ்வாறிருக்க கரந் தன் சந்திக்கு அண்மையில் வீதியில் காணப்பட்ட பாரிய குழிகளும் சிமெந்துக் கற்களைக் கொண்டு புனரமைக்கப்பட்டுள் ளன.

(வி,03)

# இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை தரமுயர்வு

(அச்சுவேலி)

அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை ஆனது அதன் வாடிக்கையாளர் சேவைமூலம் அதிகூடிய வருமானத்தை ஈட்டிக்கொடுத்ததற்காக தரம் உயர்த்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள ஏனைய இதேதரத்தைச் சேர்ந்த இலங்கை வங்கிகளுடன் ஒப்பிடும் போது அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை வாடிக்கையாளர் சேவை மூலம் அதிக இலா பத்தையும் வருவாயையும் ஈட்டிக்கொடுத்த மைக்காவே இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வங்கியின் முகாமையாளர் சிறந்த சேவைக்காக அரசினால் கௌரவிக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(03)

# 24 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்




(தெல்லிப்பளை)


தெல்லிப்பளை தந்தைசெல்வாபுரம் கிராமத்தில் வறுமைக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 24 மாணவர்களுக்கு செப்த சில்ரன் நிறுவனத்தால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கிராம அலுவலர் அலுவலகத்தில் கடந்த 19ஆம் திகதி இடம் பெற்ற நிகழ்வில் செப்த சில்ரன் நிறுவனத்தின் உதவித்திட்டப்பணிப்பாளர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கிவைத்தார்.

(93)



யாழ். குடாநாட்டில் அண்மைய காலங்களில் மிகவும் மோசமாக அதிகரித்துள்ள சமூகச் சீரழிவுகள் தொடர்பில் நாம் அனைவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

யாழ். குடாநாட்டின் நகர்ப்புற மாணவர்கள் மத்தியில் தற்போது போதைப்பொருள் பாவனை மிகவும் மோசமாக அதிகரித்துள்ளது தொடர்பில் கிடைக்கப்பெறும் தகவல்கள் மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளன. போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட யாழ். குடாநாட்டு மாணவர்கள் பலர் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அதனை விநியோகிக்கும் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடும் ஒருவர் இரு மணி நேரத்தில் 45 ஆயிரம் ரூபாவிற்கும் மேலான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்

# களங்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள்...

துள்ளது. ஆபாச இறுவட்டுக்களின் பாவனையும் அது தொடர்பான வர்த்தகமும் மாணவர்கள் மட்டத்திலேயே அதிகளவில் பரவி வருவதாகவும் தெரிய வருகிறது. இவ்வாறான தொடரும் சமூகச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கையெடுப்பது அவசியமாகும். இதற்கு பெற்றோரின் விழிப்புணர்வும் அவசியமாகும்.

மாலை நேரங்களில் சந்திக்கு சந்தி குழுமி நிற்கும் இளைஞர்கள் கூட்டம் மோட்டார் சைக்கிள்களில் ஊர்வலம் செல்வது போன்று சென்று தனியார் வகுப்புகளுக்கு சென்றுவிட்டு செல்லும் மாணவிகள் மட்டுமன்றி வீதிகளில் தனியாகச் செல்லும் குடும்பப் பெண்களிடமும் தகாத வார்த்தைகளைக் கூறி அநாகரீகமான முறையில் நடந்து கொள்வது தொடர்பிலும் முறையிடப்பட்டுள்ளது. சமூகச் சீரழிவின் உச்சத்தையே இது வெளிக்காட்டி நிற்கிறது.

யாழ். நகரப் பகுதியில் இயங்கிவந்த விபசார விடுதியொன்று அண்மையில் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த ஆண்களும், பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் யாழ். குடாநாட்டின் கலாசாரப் பாரம்பரியத்திற்கு கறை படிந்த ஒரு நிகழ்வாகவே கருதப்படுகின்றது.

இவையெல்லாவற்றையும் விட யாழ். பல்கலைக்கழக மா்ணவர்களின் பகிடிவதைகளும் தற்போது கட்டுக்கடங்காத ஒன்றாக அமைந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவைச் சேர்ந்த முதலாம் வருட மாணவன் ஒருவன் இரண்டாம் வருட மாணவர்களின் பகிடிவதையால் தாக்குதலுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். போரின் வடுக்கள் மாறாத நிலையில் இவையெல்லாம் எதற்காக என்பது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஏன் சிந்திக்கத் தயங்குகின்றார்கள்.


கிரீஸ் மனிதன் என்ற அச்சம் தரும் நிகழ்வு தணிந்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மக்களின் சமூக வாழ்நிலைக் கட்டமைப்புக்களை சிதைக்கும் போதைவஸ்து பாவனை, விபசாரம், ஆபாசப்பட இறுவட்டுக்களின் விநியோகம், பல்கலைக்கழக மாணவர்களின் பகிடி வதை, படுகொலை கலாசாரம், கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் இவற்றின் பின்னணியிலுள்ளோர் யார்?

பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொடுத்த கடந்த மூன்று தசாப்தகால வடக்கு, கிழக்கு மக்களின் போருக்கு பிந்திய இன்றைய வாழ்வு எங்கே சென்றுகொண்டிருக்கிறது? கண்ணை மூடிக்கொண்டு குற்றஞ் சுமத்துவதை விட்டு விட்டு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பாரியதோர் விடயமாகும்.

*- நன்றி: பூந்தளிா*

# தேவை அறியாமல் ஈழம் கதைக்கிறார்கள்

83 இற்குப் பிறகு பொதுவான நிலை என்னவெனறால் எம்.ஜி.ஆரோ, கருணாநிதியோ ஒருவர் இன னொருவருக்கு எதிராக எங்களுடைய பிரச்சினைகளைப் பயன்படுத்துவது என்கிற அளவிலேயே இருந்து வந்திருக்கிறது. இப்போ ஜெயலலிதா அம்மா இருக்கிறாங்க. அவங்களும் கலைஞருக்கு எதிராகத்தான் எங்கள் பிரச்சினையைக் கையில் எடுக்குறாங்க.



தூக்குத் தண்டனை விசயத்தில் கலைஞர் பெரிய அறிக்கையெல்லாம் விடறார். ஆனால் அவர் 5 வருடம் இருந்தபோது ஒன்றும் செய்யவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் டெல்லி எடுத்திருக்கக் கூடிய எந்த முடிவுகளையும் அது பா.ஜ.க.வாக இருக்கலாம் அல்லது காஙகிரஸாக இருக்கலாம். எதுவாக இருந்தபோதிலும் தமிழ் நாட்டு அரசியல் சக்திகள் குறிப்பாக திராவிடக் கட்சிகள் அவற்றில் தலையிட்டு எதையும் செய்ய முடியவில்லை.

என்னுடைய அபிப்பிராயத்தில் தமிழகத்தில் இருக்கக் கூடிய சக்திகள் குறிப்பாக திராவிட இயக்கக் கட்சிகள், அவைதானே பெருசு, அவர்களுடைய செல்வாக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எதையும் செய்துவிட வில்லை. ஆனால் இலங்கைத் தமிழர்களிடையே எம்.ஜி.ஆருக்கு பெரிய பேர் இருக்கு. இயக்கங்களை வளர்த்துவிட்டது அவர்தான்.

எம்.ஜி.ஆர். என்றால் கடவுள். காசு கொடுத்தார். ஆதரவு கொடுத்தார். அப்படி தமிழக அரசியல் சக்திகள் நடத்திய போராட்டங்களையும் உதவிகளையும் நான் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால் டில்லியின் மீது அவர்கள் எந்தச் செல்வாக்கையும் செலுத்த முடியவில்லை என்பதே உண்மை.


உண்மையில் என்னைப் பொறுத்தளவில் எங்கள் பிரச்சினைகளை இங்குள்ள கல்விமான்கள் புரிந்துகொண்ட அளவிற்கு அரசியல் சக்திகள் புரிந்து கொள்ளவில்லை. இப்ப எங்கட பிரச்சினை பழ.நெடுமாறன், வைகோ. சீமான் போன்றவர்கள் கேட்பதுபோல் ஈழமல்ல, தனிநாடல்ல. எங்களுக்கு ஒரு முறையான அதிகாரப் பரவலாக்கம் வேணும்.

அன்றைக்கு மொழிப் பிரச்சினையில் தொடங்கியது எங்கள் போராட்டம். இன்றைக்கு இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகிற பிரச்சினையா போயட்டுதில்ல. இலங்கையில் பிரச்சினை மாறி இருக்கு. ஆனால் தமிழகத்துல இன்னும் ஏதோ 56 ஆம் ஆண்டு பிரச்சினையைக் கதைக்கிற மாதிரிதான் அம்மாவும் ஐயாவும் கதைக்கிறாங்க.

எங்கட பிரச்சினை மாறியிருக்கு என்பதை நீங்கள் புரிந்து கொள்ளணும். நாங்க வீட்ல இருக்க இயலாமப் போகுது. எங்களுக்கு மொழியல்ல பிரச்சினை. உயிர்வாழ்வு, இருப்பு.... இங்கே இதெல்லாம் விளங்கல. இங்கே இருந்து கொண்டு ஈழம் கதைக்கிறார்கள்.

**- குமுதம் தீராநதி பேட்டியில் தினக்குரல் ஆசிரியர் வீ.தனபாலசிங்கம்**

# போர்ஹே மற்றும் நான்



**போர்**ஹேயின் புகழ்பெற்ற சிறு கதையான "Borges and I" இல் "போர்ஹே தன்னுடைய கதைகளையும், கவிதைகளையும் புனைவதற்கு ஏதுவாக இருக்க நான் வாழ்கிறேன். என்னை நான வாழவிடுகிறேன்.'' என்றொரு வரி இடம் பெற்றிருக்கிறது, ஒரு பக்க அளவில் அமைநதுள்ள இந்தக் கதை புனைவெழுத்தின் அசாத்தியமான சாதனை.

எழுத்தாளன் என்ற இருப்பு விந்தையானது என்ற எண்ணத்தை எவவளவோ படைப்பாளிகள் அடையாளம் காட்டியிருக்கிறார்கள். ஆனால் போர்ஹே அதைத் தனது புனைவின் வழியே அழகாக வெளிப்படுத்துகிறார்.

இரட்டை நிலை பற்றி போர்ஹேயிற்கு எப்போதுமே அதீத விருப்பம் உண்டு. இது குறியீடாக அவரது கதைகளில் தொடர்ந்து இடம்பெறுகிறது.

நான் கிராமப்புறத்தில் கேட்ட மயில்ராவணன் கதையில் வரும் இராவணனின் கோட்டையின் வடி வம் விசித்திரமானது. அதன் உள்ளே நுழைந்தவர்களால் வெளியேறிச் செல்லவே முடியாது. அது ஒரு கணிதப்புதிர் போல அமைக்கப்பட்டிருக்கும்.

போர்ஹே குறிப்பிடும் Labyrinth என்ற சுழல்புதிர்வழியும் இது போன்றதே. மலையாளத்தில் Labyrinth என்பதை ராவணன் கோட்டை என்றே மொழியாக்கம் செய்கிறார்கள்,

அந்தக் கதையில் வரும் மயில்ராவணன் ஒரேநேரத்தில் இரண்டு இடங்களில் இருக்க முடியும் என்று சொல்வார்கள். அதை நினைக்கையில் வியப்பாக இருக்கும்.

போர்ஹே அது போன்ற ஒரு இரட்டை நிலை என்பது எல்லா எழுத்தாளர்களுக்குள்ளும் இருக்கிறது. தனிப்பட்ட வாழ்வியல் ரசனைகளும் எழுத்தாளன் என்ற இருப்பின் ரசனைகளும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டது. பொதுவான சில அம்சங்களே இருவரையும் ஒன்று சேர்கின்றன என்கிறார்.

எழுத்தாளன் என்ற இருப்பே தனிமனிதனின் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது என்று சுட்டிக் காட்டும் இக் கதையில் முக்கியமான வரி என்னை நான் வாழ விடுகிறேன் என்பதே.

ஒரு மனிதன் தனக்குள்ளாக எழுத்தாளன் வாழ்வதற்கான வழிகளை உருவாக்கித் தர வேண்டியிருக்கிறது. அது இல்லாமல் போய் புறநெருக்கடிகளால் மூச்சுத்திணற ஆரம்பித்தால், அது எழுத்தாளனின் செயற்பாடுகளை முடக்கிவிடும் என்பதே உண்மை.

போர்ஹேயின் இக்கதை எழுதுவதற்கு மிகுந்த சவாலானது. மிகப்பெரிய ஆளுமையால் மட்டுமே இது சாத்தியம்.

இக்கதையை ஆராய்ந்து பார்க்கையில் இதன் மூன்று தளங்களை நாம் அடையாளம் காணமுடிகிறது.

ஒன்று கதாசிரியனாக போர்ஹே இக்கதையை எழுதியிருக்கிறார். அது ஒரு தளம்.

இரண்டு, கதையில் போர்ஹே என்ற புனைவுருவம், அல்லது எழுத்தாளன் என்ற இருப்பிற்கும் தன்னிலை என்ற போர்ஹேயின் இருப்பிற்கும் இடையில் கதை நிகழ்கிறது. அதில் ஒரு இரட்டை நிலை உருவாக்கபடுகிறது.

மூன்று, தான் எள எழுத்தாளன் என்ற இரட்டைநிலை. இந்த இரட்டை நிலையில் தன்னிலை என்பது மிகவும் எளிய ஒன்று. எழுத்தாளன் என்ற மறு நிலை உயர்வானது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

புனைவின் மீதான புனைவு பற்றி நூறு பக்கம் கட்டுரைகள் எழுதி விளக்கிக் காட்டுவதை விடவும் இந்தக் கதை எளிமையாக அதைப் புரிய வைத்து விடுகிறது. கதையின் கடைசி வரி இப்படி முடிகிறது:

எங்களில் யார் இந்தப் பக்கத்தை எழுதுகிறோம் என்று எனக்குத் தெரியாது.

இங்கே வாசகன் புனைவின் அதிகபட்ச சாத்தியத்தை உணருகிறான்.

தன்னிருப்பும் புனைவுகளால் தான் உருவாக்கப்படுகிறது. எழுத்தாளனும், புனைவுகளும் கனவுகளும் சேர்ந்தே உருவாகிறான். இந்த இரண்டும் ஒன்றையொன்று அனுமதிக்கிறது.

சுய அடையாளம் பற்றிய கதையாக இதை வாசிக்கும் போது நமது இருப்பை எது அர்த்த முள்ளதாக்க உருவாக்குகிறதோ அதை அனுமதிப்பதே வாழ்வை மேம்படுத்த கூடும் என்று போரஹே சுட்டிக்காட்டுவதாகப் புரிந்து கொள்ளலாம்.

*- எஸ் ராமகிருஷ்ணன்*

# வெற்றிக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

- சாதிக்க வேண்டும் என்ற சபதம் இருக்கிறது.
- வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியம் இருக்கிறது.
- வென்று காட்ட வேண்டும் என்ற வீம்பு இருக்கிறது.
- அடைவதற்கு என்று ஒரு இலட்சியம் இருக்கிறது.
- அந்த இலட்சியத்தில் ஒரு தீவிரம் இருக்கிறது.
- வாய்ப்பு எங்கே, எங்கே என்று தேடுகின்ற தாகம் இருக்கிறது.
- உணவு, உறக்கம் இவற்றைக்கூட ஒதுக்கி வைக்கும் உழைப்பு இருக்கிறது.
- தடை, தாமதம், தோல்வி எது வந்தாலும் சமாளிக்கும் தாராள மனம் இருக்கிறது.
- அடிமேல் அடிபட்டாலும் அடுத்த அடியை எடுத்து வைக்கும் துணிச்சல் இருக்கிறது.
- தங்கள் தகுதிக்கும், திறமைக்கும் சரியான தீனி எங்கே, எங்கே என்கிற தேடல் இருக்கிறது.
- தொடர்ந்து, எந்த வகையிலாவது ஏதாவது பலங்களைக் கூட்டிக்கொள்ளும் பழக்கம் இருக்கிறது.
- சூழ்நிலைக்குத் தகுந்தபடி அனுசரித்துப்போகும் அடக்கம் இருக்கிறது.
- விமர்சனத்தைச் சரியான விதத்தில் எடுத்துக்கொள்ளும் விவேகம் இருக்கிறது.
- அறிவு, ஆற்றல், ஆதரவுகள் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் மூளை இருககிறது.
- குறிக்கோள் நோக்கிய வேலைகளுக்கு மட்டுமே நேரத்தை அதிகமாய் ஒதுக்கும் அக்கறை இருக்கிறது.
- கடமைகள் காத்துக் கிடக்க, பொழுதுபோக்குகளில் புத்தியை செலுத்தாத பொறுப்பு இருக்கிறது.
- நேற்றைவிட இன்று எவ்வளவு வளர்ந்தோம் என்று அளந்து அறியும் ஆர்வம் இருக்கிறது.
- அத்தனைக்கும் அடிப்படையாய் அசைக்க முடியாத தன்னம்பிக்கை இருக்கிறது.

# ஆணைக்குழு அறிக்கை அடுத்து என்ன?

**400** பக்கங்களைக் கொண்ட அறிக்கையின் உள்ளடக்கம் பற்றிய அதிகாரபூர்வத் தகவல்கள் ஏதும் வெளிவராத போதும், போரில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக, சாட்சியங்களின் அடிப் படையில் முதற் தகவல் ஆதாரங்கள் இருப்பதால அதுபற்றி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு சர்வதேச ஊடகங்கள் அதிக முக்கி யத்துவம் கொடுத்து தகவல்களை வெளியிட்டு



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நமபகமானதாக இருக்க வேண்டும் என எதிர்பாரக் கும் சர்வதேச சமூகம், இதன் பரிந்துரைகளின் மீதான அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி அமை யப் போகிறது என்றும் உன்னிப்பாக அவதானிக் கிறது.

குறிப்பாக அரசாங்கத்துக்கு இப்போது வெளி நாடுகள் அழுத்தம் கொடுத்தாலும், எதிர்வரும் மார்ச் மாதம் வரை எந்த நெருக்கடியும் இல்லை.

மார்ச் மாதம் தான் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டம் நடக்கப் போகிறது. அதுவரை அரசாங்கம் எதைப் பற்றியும் கண்டுகொள்வ தற்கோ கவலைப்படுவதற்கோ வாய்ப்பில்லை.

அரசாங்கம் இந்த 400 பக்க அறிக்கையைப் படித்து, அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத் துவதற்கு கால அவகாசம் கோரலாம்.

ஆனால், போரினால் ஏற்படுத்தப் பட்ட காயங்களும், வடுக்களும் மிகவும் ஆழமானவை. அவற்றை மிகச்சாதா ரணமாக மருந்திட்டு போக்கிவிட முடி யாது.

அறிக்கையை பகிரங்கப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதை வருகின்றன.

இந்த அறிக்கையின் இரகசியங்களைப் பாது காக்க அரசாங்கம் முடி வெடுக்குமேயானால், அது பல்வேறு வதந்திகள், புரளி கள் உலாவுவதற்கு வசதியாகி விடும். அது பல புதிய பிரச்சினைகளுக்கும் வழிவிடும்.

உணர்வுபூர்வமான விடயங்கள் என்று கூறி, சிலவற்றை மறைக்கப் பார்த்தால், ஆயிரக்கணக் கான மக்கள் கொல்லப்பட்டதை விடவா உணர்வு பூர்வமான விடயம் ஒன்று இருக்கப் போகிறது என்ற கேள்வியும் வரும்.

ஆணைக்குழுவின் அறிக்கையில் படையினர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுமானால் அவர் களை தண்டிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும், யாரையும் பாதுகாக்கப் போவதில்லை என்றும், அண்மையில் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் உறுதியாகக் கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்த நிலையில் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அல்லது குற்றம்சாட்டப்படும் எவரையும் மறைக் கவோ பாதுகாக்கவோ வேண்டிய தேவை அவருக்கோ அரசாங்கத்துக்கோ இருப்பதற்கு நியாயமில்லை.

உறுதிப்படுத்த சர்வதேச சமூகம் ஆர்வம் காட்டி வரும் நிலையில் அதன் ஒருபகுதியை வெளி யிடாமல் மறைப்பதோ அல்லது பரிந்து ரைகளை நடைமுறைப்படுத்துவதில் மெத்தனப் போக் கைக் கடைப்பிடிப்பதோ விமர்சனங்களை உருவாக்க லாம்.

எல்லாமே சுமுகமாக நடந்தேற வேண்டுமானால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இழுத் தடிக்கப்படாமல் வெளியிடப்பட வேண்டும், அது வும் முழுமையாக. அடுத்து அதன் பின்னான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவையெல்லாம் இப்போது ஜனாதிபதியின் கையில்தான் உள்ளன. அரசாங்கத்தை நெருக் கடியை நோக்கித் தள்ளிச் செல்வதா அல்லது அதிலிருந்து தப்பிக் கொள்வதா என்பதை தீர் மானிக்கும் சக்தி இப்போது அவரது கையில் தான் இருக்கிறது.

*- கே. சஞ்சயன் கட்டுரையில்*

# நட்சத்திர தருமம்

**கோ**டிகளில் புரளும் நட்சத்திரங்கள் சில ஆயிரங்களை விட்டெறிவதை, அவர்களது கைகளுக்குத் தெரியாத தருமம், விளம்பர நோக்கமற்ற உதவி என்று ஆயிரத்தெட்டு முறை இந்தக்கதைகளை ' கேட்டிருந்தாலும், இன்று ஏதோ அஜித் ம்ட்டும் விளம்பரமில்லாமல் படப்பிடிப்பில் தொழிலாளிகளுக்கு பிரியாணி செய்து போடுகிறார் என்று குதூகலிக்கிறார்களே? ஒரு மொக்கை மனிதாபிமானத்தை பாராட்டும் கருத்து கூட அப்படியே அட்சரம் மாறாமல் அதே தரமான மொக்கையுடன் இருப்பதை என்னவென்று சொல்ல?



தமிழ் சினிமா நட்சத்திரங்களின் வளளல் கதைகள் குறித்து எம்.ஜி.ஆர் தொட்டு விஜயகாந்த் வரை ஏராள முண்டு. ராமாவரம் தோட்டத்தில் புரட்சித் தலைவர் போடாத விருந்தா, சாப்பிடாத ஆட்களா? விஜயகாந்த் கொடுக்காத அயர்னிங் மிஷினா, மூன்று சக்கர வண்டியா? இல்லை அகரம் பவுண்டேஷன் சூர்யாவின் வள்ளல்தனத்தை வியக்காத பதிவர் களா? எழுதாத பத்திரிகையாளர் களா? யாரிடம் கதை விடுகிறீர்கள்?

சிநேகா, பிரசன்னா காதல் திரு மணமாக நடக்கப் போகிறது என் பதை தினமணியின் வைத்தி மாமா முதல், தினமலரின் அந்துமணி மாமா வரை தலைப்புச் செய்திகளில் கொண்டாடுவதை கண்டிருப்பீர்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தமது ஊதியம் அதாவது தினசரி பேட்டா உயர்த்தப்படாத நிலையில் போராடப் போவதாக பெப்சி அதாவது தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம் அறிவித்திருந்ததை எத்தனை பேர் அறிவீர்கள்?

கோடி கோடியாக சுருட்டும் எந்த ஹீரோவாவது தங்களது கெட்டுப் போகும் உடலை, திரையில் பிரிஜ்ஜில் வைத்த ஃபிரஷ்ஷான தக்காளி போல காட்டுவதற்கு, தங்களது உடலை வதைக்கும் லைட்மேனுக்கோ, சண்டை நடிகர்களுக்கோ, துணை நடிகர்களுக்கோ, முகப்பூச்சு கலைஞர்களுக்கோ குரல் கொடுத்தார்களா? தொழிலாளர்களின் சம்பளத்தை நியாயமாக உயர்த்தாமல் நான் நடிக்கமாட்டேன் என்று தலயோ, தளபதியோ, உலக நாயகனோ, சூப்பரோ பேசினார்களா? இல்லை அவர்கள் ஏன் பேசவில்லை என்று பதிவுலகம்தான் துள்ளிக் குதித்ததா?

1950களுக்கு பிறகு ஒளிப்பதிவாளர் நிமாய் கோஷ், இசையமைப்பாளர் எம்.பி சீனிவாசன் போன்ற தலைவர்கள் அவர்களை அமைப்பாக்கி போராடினார்கள். அப்போது அவர்களை ஒழிப்பதற்கு ஏ.வி.எம் முதலான முதலாளிகள் துடித்ததும் வரலாறு. அந்த வகையில் குறைந்த பட்ச உரிமைகளையாவது பெற்றுத்தரும் அமைப்பாகத்தான் பெப்சி உருவெடுத்தது. அதுவும் இப்போது அம்மா, அய்யா ஆட்களின் தயவில் ஏதாவது கிடைக்காதா என்ற அவல நிலையில் காலம் தள்ளுகிறது.

*- வினவு இணையம்*

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

④ - டி.பி.எஸ்.ஜெயராஜ்

**ப**ரிஸில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரெஞ்சு நடவடிக்கைகள் ஏப்ரல் முட்டாள்கள் நாளன்று தொடங்கப்பட்டது. பிரெஞ்சு சட்ட அமுலாக்க அதிகாரிகள் எல்.ரீ.ரீ.ஈ யினருக்கு எதி ராக உறுதியான நடவடிக்கைகளில் 2007 ஏப்ரல் முதலாம் திகதி ஈடுபட்டது, பிரான்சிலுள்ள புலிகளுக்கு ஒரு மோசமான ஏப்ரல் பூல்ஸ் நகைச்சுவை போலத் தோன்றியிருக்கலாம்

காவல்துறையினர் மு.ப. 4.00 மணியளவில் மேற்கொண்ட அதிகாலைத் திடீர்த்தாக்குதலின் போது சந்தேகத்துக்கிடமான 39 புலிச் செயற்பாட்டாளர்களை மேலதிக விசாரணைக்கு வேண்டிக் கைது செய்து காவலில் வைத்தார்கள். கைதுகள் பரிஸிலுள்ள, சினேமான, மற்றும் சினே செயின்ட் டெனிஸ், பரிஸுக்கு அருகல் உள்ள லா கோர்னேவு, மற்றும் வால் டி மான் மற்றும் வால் டி ஒயிஸ் ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பரிஸின் சுற்றுப்புறங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்பு துணை இயக்குனரகம் (எஸ்.டி.ஏ.ரி), பிரெஞ்சு உள்துறை அமைச்சகத்தின் கீழுள்ள விசேட பயங்கர வாத எதிர்ப்பு இயக்குனரகம் என்பனவற்றின் கட்டளைகளின்படி, 210 காவல்துறை அதிகாரிகள் எல்.ரீ.ரீ.ஈயினரின் கட்டுப்பாட்டி லுள்ள நிறுவனங்கள் மற்றும் முக்கிய எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர் களின் வீடுகள் என்பனவற்றில் மின்னல் வேக அதிரடிச் சோத னைகளை நடத்தினார்கள். சோதனை நடத் தப்பட்ட நிறுவனங்க ளில் பரீஸின் பைரனீஸ் வதி, 341 ஆம் இலககத் தில் அமைந்திருந்த பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்பு பேரவை(ரி.சீ.சீ) தலைமைச செயலகமும் அடங்கும்.



பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்பு பேரவை(ரி.சீ.சீ)யானது நாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈயினரின் ஏற்றுக் கொள்ளப்பட்ட முன்னணி அமைப்பாகும். பரீஸில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஏனைய நிறுவனங்களில் தமிழ் தொலைக்காட்சி வலையமைப்பு (ரி.ரி.என்), மாரியம்மன் கோவில், மக்கள்கடை எனப்படும் பல்பொருள் அங்காடி, தமிழ் அச்சகம், மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக (ரி.ஆர்.ஓ) அலுவலகம் என்பனவும் உள்ளடங்கும்.

கணினிகள், கடிதத் தொடர்புகள் அடங்கிய கோப்புகள், ஆவணங்கள், கணக்குப் பதிவேடுகள், புத்தகங்கள், காணொளிப் பதிவுகள், மற்றும் கையேடுகள் என்பன கைப்பற்றப்பட்டன. 23,500 யூரோக்கள் பெறுமதியான நாணயத் தாள்கள் மற்றும் 42,000 யூரோக்கள் பெறுமதியான காசோலைகள் முறையே ரி.சீ.சீ மற்றும் ரி.ஆர்.ஓ வளாகங்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

எல்.ரீ.ரீ.ஈ யின் நிதி சேகரிப்பு இயக்கங்கள் வழக்கமாக வெள்ளி மாலை ஆரம்பித்து ஞாயிறு மாலை வரை தொடர்ந்து நடக்கும். சுமார் 60,000 யூரோக்கள் பெறுமதியான நாணயத் தாள்கள் மற்றும் 25,000 யூரோக்கள் பெறுமதியான காசோலைகள் என்பன செயற்பாட்டாளர்களின் வீடுகளில் கண்டெடுக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட 39 பேரில் முதற்கட்ட விசாரணைகளின் பின்னர் 22 பேர்கள் ஏப்ரல் முதலாம் திகதியே விடுவிக்கப்பட்டனர். அடுத்த நாள் மேலும் இருவர் விடுவிக்கப்பட்டனர்.

ஏப்ரல் 2, 2007 காலை 10 மணியளவில் மற்றொரு நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டது. பரீசில் தமிழருக்கு சொந்தமான 75 விகித மான வியாபார நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ள லா சப்பல் மற்றும் மார்சடட் பொய்சனரீஸ் பகுதிகளை காவல்துறையினர் சுற்றி வளைக்கத் தொடங்கினர். வணிக வளாகங்கள் யாவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதன் உரிமையாளர்கள், பணியாளர்கள், மற்றும் சில வாடிக்கையாளர்கள் உட்பட அனைவரும் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். எல்.ரீ.ரீ.ஈ தொடர்பான புதினப் பத்திரிகை கள், சஞ்சிகைகள், இறுவட்டுகள், காணொளிப்பதிவு கள், புத்தகங கள், மற்றும் புகைப்படங்கள் போன்ற பொருட்கள் மற்றும் வெளி யீடுகள் கைப்பற்றப்பட்டன. மேலதிக ஆய்வுகளுக்காக 20 பேர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களில் இரண்டு பேர் அன்று மாலையில் விடுவிக்கப்பட்டார்கள்.

ஏப்ரல் 3 மற்றும் ஏப்ரல் 4 ஆகிய தினங்களிலும் காவல்துறை யினர் நடவடிக்கைகள் தொடர்வதைக் காணமுடிந்தது. குட்டி யாழ்ப்பாணம் என்றழைக்கப்படும் வடக்கு ரயில் நிலையப் பகுதி முக்கிய பரிசீலனைக்கு உள்ளானது. பிரான்சிலுள்ள எல்.ரீ.ரீ.ஈயின் நிதி சேகரிப்பு வலையமைப்பின் அங்கத்தவர்கள் என்ற குற்றச் சாட்டுகளுக்கு ஆளானவர்கள் யாவரும் அவர்களது வீடுகளில் வைத்து நேர்காணப்பட்டு காணொளிப் பதிவுகளுக்கு உள்ளாக்கப் பட்டார்கள். அவர்களுக்குச் சொந்தமான வீடுகள், வாகனங்கள், மற்றும் இதர சொத்துக்கள் யாவும் புகைப்படமெடுக்கப்பட்டதுடன் காணொளிப் பதிவுகளுக்கும் உள்ளாயின. தினசரி ஒருவர் வீதம் பலர் தடுத்து வைக்கப்பட்டனர். ஏப்ரல் 5 ஆம் திகதி ஒரு விசேட பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றலின் முன்னாக மொத்தம் 19 சந்தேக நபர்கள் முன்னிறுத்தப்பட்டார்கள்.

ஆரம்பத்தில் மிரட்டிப் பணம் பறித்தல், உடல் வன்முறைகளை ஏற்படுத்துதல், மற்றும் பிரான்சில் குடியேறியுள்ள தமிழர்களிடத்து சட்டவிரோத வரையறைகளைப் பயன்படுத்தியது போன்ற பல் வேறு குற்றங்களின் பேரில் 19 பேர்கள் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளா னாரகள். அவர்கள் மீது மேலும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தது மற்றும் பயங்கரவாத அமைப்புடன் குற்றவியல் கூட்டு ஏற்படுத்தி யது போன்ற குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ கவலை யளிக்கும் ஒரு பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்டது.

தொடரும்....

# வரவு-செலவுத்திட்ட சலுகைகள் அரசின் வெற்று வாக்குறுதிகள்

## குற்றஞ்சாட்டுகிறது மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

படை வீரர்களுக்கு மூன்றாவது குழந்தை பிறக்கும்போது 100,000 ரூபா வழங்குவதாக 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும்,இந்த வருடத்தில் படை வீரர்கள் எவரும் இந்தப் பணத்தை பெறவில்லை. பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுவதாக கடந்த திங்கட்கிழமை முன்வைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்கம் உறுதியளித்திருந்தது. இருப்பினும் இதையும் அரசாங்கத்தின் வெற்று வாக்குறுதி யென்றே கருத வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தக் கொடுப்பனவுக்காக 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் படை வீரர்களின் குடும்பங்களுக்கு 1,200 மில்லியன் ரூபா ஒதுக்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

படை வீரர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டதெனின், 12,000 குடும்பங்களுக்கு இந்தப் பணம் கிடைத்திருக்கும். ஆனால் எந்தவொரு படை வீரர் குடும்பமும் இந்தச் சலுகையைப் பெறவில்லையென்பது எங்களுக்குத் தெரியும். அடுத்த வருடம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கும் இவ்வாறான சலுகைத்திட்டம் வழங்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார். ஆனால் இது வெறும் வாய்ப்பேச்சு மற்றும் கண்துடைப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## போலிக் கடவுச்சீட்டு நால்வர் கைது

(கொழும்பு)

போலி இந்திய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பாரிஸுக்கு பயணமாகவிருந்ததாகத் தெரிவிக்கப்படும் பெண்ணொருவர் உட்பட இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் இந்திரகாந்தி விமான நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் ஒருவருடன் பயணமாகவிருந்த பெண் முகவரொருவர் பற்றிய விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பஹ்ரெய்னூடாகபாரிஸ் பயணமாகவிருந்த இந்தப் பயணிகளின் பயணப் பத்திரங்களை குடியகல்வு அதிகாரிகள் பார்வையிட்டபோது, இவை போலியானவையெனக் கண்டுபிடிக்கப்பட்டன. இவர்கள் தம்மை சுமன் ராஜசேகர், தேவநேசன் ஜெயா, நீலகண்டன் ராமசாமி, பால்ராஜ் குமார் என அடையாளப் படுத்தினர்.

இவர்கள் மீது தனித்தனியாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இவர்களின் பயணத்தை விஜய லலிதா என்னும் பெண் முகவ ரொருவர் ஒழுங்கு செய்ததாகத் தெரிய வந்துள்ளது.

விமானசேவை உத்தியோகத்தர்கள் சிலரும் இது தொடர்பில் விசாரிக்கப்படவுள்ளனர்.

## மது உற்பத்தி நிலையம் வெடித்துச் சிதறியது

(கொழும்பு)

சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டிருந்த வேளையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தினால் காயமடைந்த நால்வர் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரம் தம்புத்தேகம பிரதேசத்தில் குறித்த நால்வரும் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டிருந்தபோது நேற்று முன்தினம் மாலை இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இவர்கள் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## உள்நாட்டில் தயாரிக்கப்படும் மதுபான உற்பத்தி அதிகரிப்பு



(கொழும்பு)

உள்நாட்டில் தயாரிக்கப்படும் செறிவான மதுபானங்கள், பியர் ஆகியவற்றின் உற்பத்திகள் கடந்த வருடத்தில் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்தில் 49 மில்லியன் லீற்றர் செறிவான மதுபானம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தைவிட அதிகமாக 41.1 மில்லியன் லீற்றர் செறிவான மதுபானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2009ஆம் ஆண்டு 55.5 மில்லியன் லீற்றர் பியர் உற்பத்தி இடம்பெற்றது. கடந்த வருடம் 71.3 மில்லியன் லீற்றர் பியர் தயாரிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்கள அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டில் 384 ரூபாவை மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் மூலம் பெற்றுக்கொண்ட கலால் திணைக்களம் கடந்த வருடம் இந்த வகையில் 407 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொண்டது. அத்துடன், நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அபராதத்திற்கமைய 234 மில்லியன் ரூபா கலால்த் திணைக்களத்திற்கு கிடைத்தது.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் அதிகரித்த மதுபாவனையும் சுற்றுலாப்பயணிகளின் அதிகரிப்பும் இலங்கையில் மதுபான விற்பனை அதிகரித்தமைக்கு காரணங்களாக அமைகின்றனவென கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. சட்டத்திற்குப் புறம்பான மதுபான உற்பத்திகள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும் சட்டரீதியான மதுபான விற்பனை அதிகரிக்கக் காரணமென கலால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல் விநியோகம்

(கொழும்பு)

2012ஆம் ஆண்டிற்கான பாடநூல் விநியோகம் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி முன்னெடுக்கப்பட உள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. டிசம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக சகல பாடசாலை அதிபர்களும் தத்தமது பாடசாலைகளுக்குரிய பாடநூல்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார கூறினார்.

இதன் பிரகாரம் இறுதித் தவணை விடுமுறைக்கு முன்னதாக மாணவர்களுக்கான பாடநூல்களை விநியோகிக்க எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். பாடசாலைகளுக்குத் தேவையான பாடநூல்களை வலயங்களின் மத்திய நிலையங்களுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

ஏதேனும் பாடசாலைக்கு பாடநூல்களுக்கான பற்றாக்குறை நிலவுமாயின் அதுகுறித்து உடனடியாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடநூல்களை மீள உபயோகிக்கும் வகையில் பயன்படுத்திய மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக சுமார் நான்கு இலட்சம் சான்றிதழ்களும் அச்சிடப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் குறிப்பிட்டார்.

பாடநூல்களை உரிய முறையில் உபயோகித்த மாணவர்களுக்கு இந்தச் சான்றிதழ்களை வைபவ ரீதியாக வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக் களம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

## 5000 ஆரம்பப் பாடசாலைகள் அடுத்த ஆண்டில் அபிவிருத்தி



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 3000 பட்டதாரி ஆசிரியர்கள் இவ்வருட இறுதிக்குள் நியமனம் பெறவுள்ளனர் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் இது குறித்து தெரிவித்த அமைச்சர் அடுத்த வருடத்தில் 1000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தோடு இணைந்ததாக 5000 ஆரம்பப் பாடசாலைகளும் மேம்படுத்தப்படும் எனவும் இவற்றுக்கென 95 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார். நடைமுறைப் பிரச்சினைகளை நிவர்த்திக்கும் வகையில் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டே இனிமேல் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் எனவும் மேலும் தெரிவித்தார்.

## மின்னல் தாக்கம் குறித்து அவதானமாக இருக்க வலியுறுத்து



(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை காலமும் மின்னல் தாக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 51 ஆக உயர்வடைந்துள்ளதாகவும், மின்னல் தாக்கம் குறித்து பொது மக்கள் அவதானமாகச் செயற்படுமாறு காலநிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த ஜயசிங்க தெரிவித்தார்.கடந்த வருடம் மின்னல் தாக்கத்தினால் 33 பேர் மாத்திரமே பலியாகியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரையிலான காலப் பகுதியில் நாட்டின் பல பகுதிகளிலும் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி 51 பேர் பலியாகியுள்ளதுடன் பலர் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.எனவே கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி பலியானோரின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், மின்னல் தாக்கம் உள்ள நேரங்களில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## சிறார் கடத்தல் தொடர்பாக தீவிர விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மொரட்டுவ - ராவத்தாவத்தை பிரதேசத்தில் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சிறார் கடத்தல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குற்ற விசாரணைத் திணைக்களமும் இணைந்து கொள்ளவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.அதன் தலைவர் அனோமா திசாநாயக்க இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

குறித்த விசாரணையை மேற்கொள்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு காவல்துறை மா அதிபர் இணங்கியுள்ளார். இந்தநிலையில், சிறுவர் இல்லத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியுள்ளோம். அங்குள்ள அனைத்து ஆவணங்களையும், கையேற்றுள்ளோம் என்றார்.

ராவத்தாவத்தையில் உள்ள குறித்த சிறுவர் இல்லம் தொடர்பில் 1929 சிறார் பாதுகாப்பு அவசர இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.சிறார் இல்லத்தில் உள்ள சிறார்களை விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் அங்கு விசாரணைகள் இடம் பெற்றன.

இதன்போது, சிறார் இல்லத்தில் 45 சிறார்கள் உத்தியோகபூர்வமான பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மேலும் 70 சிறார்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தகவல் வெளியானது.சிறப்புத் தேவையுடைய சிறார்களும் இதன் போது மோசடிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.



## சைவ நெறி பகுதி - II

**ஆறாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

1. கோயில் என்பதன் பொருள் என்ன? கோயிலுக்கும் சிவாகமங்களுக்கும் இடையிலான தொடர்பைச் சுருக்கமாகக் கூறுக.
2. நித்திய பூசை நைமித்திய கிரியைகள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் கூறுக.
3. மகோற்வசத்தின் கொடியேற்றம் வானத்திருவிழாக்கள், தேர்த்திருவிழா, மௌனேற்சவம், தீர்த்தம் என்பன ஒவ்வொன்றும் எந்தெந்தத் தொழில்களைக் குறிக்கின்றன?
4. மகோற்சவ காலங்களில் சைவமக்கள் மேற்கொள்ள வேண்டிய சைவஒழுக்க சீலங்கள் பற்றி எழுதுக.

02) சத்தசத்தைச் சாரா தசத்திரியா தங்கண் இவை, உய்த்தல் சத சத்தாம் உயிர் - திருவருட்பயன்

1. சத்து எது, அசத்து எது, சதசத்து எது?
2. ஆன்மாவின் இயல்புகள் மூன்றினை எழுதுக.
3. மூவகை ஆன்மாக்களும் எவை?
4. நல்வினைகள் தீர்வினைகள் என்பவற்றிக்கு மும்மூன்று உதாரணங்கள் தருக. வினைகள் எதற்கு காரணமாகின்றன.
5. சந்தானசாசியார் நால்வரின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக. மெய்கண்ட சாஸ்திரங்கள் எத்தனை?

03) ஊழிமலிதிருவாரம் திருத்தாள் போற்றி (சைவசமயசிவாச்சாரியா, துதி)

1. திருவாதவூர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்? அவர் அப்பெயர் பெறக் காரணம் யாது?
2. ஆவணிமூலம், ஆனிமகம் ஆகிய நாள்களில் இடம்பெறும் சமய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எவை எனக் கூறுக.
3. திருவாசகத்தின் சிறப்புப் பற்றி சுருக்கமாக எழுதுக.
4. சமய குரவர் நால்வரையும் குறிப்பிட்டு அவர்களை ஒவ்வொருவரும் இறைவனை அடைவதற்குக் கடைப்பிடித்த நெறிகளையும் முத்தியடைந்த தினங்களையும் எழுதுக.

04). பின்வரும் பாடல்கள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
அவற்றைப் பாடியோர் யார் என்பதையும், அவை எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டன என்பதையும் கூறுக.. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

1) "வேயுறு தோழிபங்கன்..........."
2) "திருவயென் செல்வமே............"
3) மூவரென இருவரென................."
4) அருவமு முருவ மாகி...................."
5) பண்ணும் பரதமும்..............."
6) ஆத்தாளை எங்கள்..................."

05. "சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை. அவனோடு ஒப்பார் இங்கும் யாவரும் இல்லை"

1. இப்பாடலில் இருந்து நீங்கள் அறிந்து கொள்ளும் உண்மை யாது? இப்பாடலை அருளியவர் யார்?
2. இறைவனின் ஐந்தொழில்களை எழுதி அவை எவ்வெவ் மூர்த்தங்களால் ஆற்றப்படுகின்றன என்பதையும் எழுதுக.
3. இறைவனின் எண்குணங்கள் எவை?
4. சைவசமயம் இறைவன் ஒருவனே எனக் குறிப்பிடுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் மூன்று ஆதாரங்களையும் இவை இடம்பெறும் நூல்களின் பெயர்களினையும் எழுதுக.

06. விரதங்கள், பண்டிகைகள் என்பன சைவமக்களின் வாழ்வில் இடம்பெறும் முக்கியமான திருநாட்கள் அல்லது நிகழ்வுகளாகும்.

1. பண்டிகைகள் மூன்று விரதங்கள் மூன்றினை எழுதுக.
2. மாத விரதங்கள் எவை? கடவுளுக்குரிய விரதம் ஒன்றினைக் குறிப்பிட்டு அவ்விரதம் எவ்வாறு அனுஷ்டிப்பீர் என்பதனை எழுதுக.
3. பண்டிகை ஒன்றைத் தெரிந்து அதைக் கொண்டாகின்ற முறையை விபரிக்கு.
4. பின்வருவனவற்றை விளக்குக.
   1. உத்தராயாணம், தட்சிண்ணாயணம், கைவிஷேம்



**க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011** நேரம் - 3 மணி

# கல்வி முரசு

## சைவ நெறி பகுதி - I

**பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

01. சைவசித்தாந்தம் ஒரு கடவுள் கொள்கையுடைய மேலான தத்துவமாகும். இங்கே குறிப்பிடப்படும் கடவுள்,
   1. சிவன் 2. விஷ்ணு 3. கணபதி 4. முருகன்

02. எமது சமயத்தின் உண்மைகளை அறிந்து கொள்வதற்குச் சமய இலக்கியங்கள் என்ற வகையில் முதன்மை பெறுபவை,
   1. திருமுறைகளும் தோத்திரப் பாடல்களும் 2. திருமந்திரமும் திருவாசகமும்
   3. புராணங்களும் இதிகாசங்களும் 4. சங்க இலக்கியங்கள்

03. கந்தபுராணத்தில் முருகனின் திருப்பெருவடிவம் எக்காண்டத்தில் இடம்பெறுகின்றது?
   1. உற்பத்திக் காண்டம் 2. அசுரக் காண்டம் 3. மகேந்திர காண்டம் 4. யுத்த காண்டம்

04. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனைப் பூவும் நீரும்கொண்டு வணங்குதல் வேண்டும் எனக் கூறிய நாயனார்,
   1. திருநாவுகரசு நாயனார் 2. திருஞானசம்பந்தர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

05. சமய குரவர்கள் பாடி மகிழ்ந்த திருத்தலங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. தலச் சிறப்புப் பெற்ற திருத்தலங்கள்
   2. திருமுறைத் திருத்தலங்கள்
   3. மங்களாசனம் செய்யப்பெற்ற திருத்தலங்கள்
   4. அற்புதங்கள் நிகழ்த்தப்பட்ட திருத்தலங்கள்

06. நினைக்க முத்தி தரும் திருத்தலம்?
   1. திருவாரூர்த்தலம் 2. காசித்தலம் 3. சிதம்பரத்தலம் 4. திருவண்ணாமலைத் தலம்

07. முதலாம் திருமுறையில் அடங்கும் பதிகங்கள்,
   1. 136 2. 122 3. 125 4. 383

08. சம்பந்தர் தளிரிளவளரொளி...............என்னும் பதிகத்தினைப் பாடிய சந்தர்ப்பம்?
   1. பாண்டியனின் வெப்பு நோயை மாற்றுவதற்கு 2. சமணர்கள் மடத்திற்கு தீ வைத்தபோது
   3. ஏட்டை தீயில் இட்டவேளை 4. ஏட்டை வைகை ஆற்றில் இட்டவேளை

09. புறச்சந்தான குரவர்களின் முதன்மையாகப் போற்றப்படுபவர்?
   1. மெய்கண்டதேவர் 2. உமாபதி சிவாச்சாரியார்
   3. அருணந்தி சிவாச்சாரியார் 4. மறைஞான சம்பந்தர்

10. மெய்கண்ட தேவர் முன்வைத்த தத்துவக் கருத்துக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
   1. அத்வைதம் 2. துவைதம் 3. விசிட்டாத்வைதம் 4. சுத்தாத்துவிதசைவசித்தாந்தம்

11. அச்சுதளகப்பாளரின் குருவாக விளங்கியவர்?
   1. மெய்கண்ட தேவர்
   2. அருணந்தி சிவாச்சாரியார்
   3. மறைஞான சம்பந்தர்
   4. உமாபதி சிவாச்சாரியார்

12. ஈழத்து சித்தர் பரம்பரையில் முதன்மைச் சித்தராக் காணப்படுபவர்?
    1. செல்லப்பாசுவாமி 2. பட்டினத்தடிகள் 3. கடையிற்சுவாமி 4. யோகர் சுவாமி

13. குமரகுருபரருக்கு பேச்சாற்றல் வந்த திருத்தலம்?
    1. திருவண்ணாமலை 2. திருச்செந்தூர் 3. திருப்பரங்குன்றம் 4. சுவாமிமலை

14. நாவலர்பெருமான் சைவசமயநெறிநின்று சமுதாய நற்பணிகளையும் புரிந்துள்ளார் என்பதற்கு ஆதாரமாகக் கூறப்படுவது,
    1. சமயப் பிரசங்கம் செய்தமை 2. புராணபடனம் செய்தமை
    3. கண்டனங்கள் செய்தமை 4. கஞ்சித்தொட்டித் தர்மம் செய்தமை

15. திரிமலத்தார் என்போர்,
    1. பிரளயாகலர் 2. சகலர்
    3. விஞ்ஞானகலர் 4 எந்தமலத்தாலும் பீடிக்கப்படாதவர்

16. பெரியோர் திருமொழி போற்றும் கடவுள்?
    1. முருகன் 2. திருமால் 3. சிவன் 4. கொற்றவை

17. சைவசமயம் முதன்மைப்படுத்துவது?
    1. உலகியல் 2. பொருள் 3. இன்பம் 4. அன்பு

18. பின்வருவனவற்றுள் பண்டிகை எனக் கொள்ளப்படுவது?
    1. ஆடிஅமாவாசை 2. சோமவாரம் 3. ஆடிச்செவ்வாய் 4. ஆடிப்பிறப்பு

19. ஆலயங்களில் சாயரட்சைப் பூசை,
    1. அதிகாலையில் நடைபெறுகின்றது
    2. விசேட தினங்களில் மாத்திரம் நடைபெறுவது வழக்கம்
    3. நண்பகலில் நடைபெறுகிறது
    4. மாலையில் நடைபெறுகிறது.

20. வாழ்க்கைக் கடமை என்ற வகையில் தந்தையை இழந்தவர்கள் நோற்க வேண்டிய விரதம்?
    1. ஆடிஅமாவாசை 2. சோமவாரம் 3. ஆடிச்செவ்வாய் 4. ஆடிப்பிறப்பு

21. சாத்வீகக் குணம் உள்ளவர்களிடம்,
    1. ஆசையும், கோபமும் நிறைந்திருக்கும்
    2. சோர்வும், மந்த நிலையும் காணப்படும்
    3. சாந்தமும் அமைதியும் நிறைந்திருக்கும்
    4. கவலையும் சோகமும் காணப்படும்

22. முத்தியடைந்த ஆன்மாக்கள்,
    1. மீண்டும் பிறவியெடுப்பதில்லை
    2. இவ்வுலகில் பிறந்து மீண்டும் இன்பங்கள் மட்டும் அனுபவிப்பர்
    3. ஞானிகள் பெறுவதில்லை

23. திருவருட்பயன் அதிகாரம் - உயிரவை நிலை கூறுவது,
    1. ஆன்மாக்களின் இயல்பு 2. பரம்பொருளின் இயல்பு
    3. ஆணவமலத்தின் இயல்பு 4. திருவருளின் இயல்பு

24. மக்கள் அடைய வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்காகும். அவையாவன,
    1. சரியை, கிரியை, யோகம், ஞானம்
    2. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
    3. சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரிய அபிடேகம்
    4. அறம், பொருள், இன்பம், வீடு

25. அரிமர்த்தன பாண்டிய மன்னனின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த சமயகுரவர்?



    1. திருஞானசம்பந்தர் 2. மாணிக்கவாசகர் 3. திருநாவுக்கரசர் 4.சுந்தரமூர்த்தி நாயனார்

26. சேக்கிழாரைக் குறிக்கும் சிறப்புப் பெயர்?
    1. தாண்டகவேந்தர் 2. தொண்டசீர்பரவுவார் 3. தென்னவன் பிரமராஜன் 4. தேவார முதலி

27. சார்ததன் வண்ணமாதல்,
    1. பதியின் இயல்பு 2. ஆணவத்தின் இயல்பு 3. மாயையின் இயல்பு 4. பசுவின் இயல்பு

28. வைகாசி மாதத்தில் வரும் மூல நட்சத்திரத்தை குருபூசைத் தினமாகக் கொண்டவர்,
    1.சம்பந்தர் 2. சுந்தரர் 3. அப்பர் 4. மாணிக்கவாசகர்

29. சைவசித்தார்ந்தத்தின்படி இவ்வுலகம் உண்டாவதற்கு முதற்காரணம்?
    1. சக்தி 2. இறைவன் 3. மாயை 4. கன்மம்

30. இந்தியாவிலிருந்து வந்து இலங்கையிலே கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் வாழ்ந்து சமாதியான ஞானி
    1. நவநாதசித்தர் 2. கடையிற் சுவாமிகள்
    3. பெரியானைக் குட்டி சுவாமிகள் 4. சித்தானைக் குட்டி சுவாமிகள்

31. சிவஞான போதத்தின் வழிநூலாக அமைந்தும், சுபபக்கம் பரபக்கம் என்னும் இருபகுதிகளைக் கொண்டதுமான சித்தாந்த சாத்திர நூல்,
    1. திருவருட்பயன் 2. சிவப்பிரகாசம் 3. சங்கற்பநிதாகரணம் 4. திருவாசகம்

32. கந்தபுராணத்தில் மறைபொருளாக அமைந்துள்ள சமயக் கொள்கை
    1. வேதாந்தம் 2. வைசசித்தாந்தம் 3. சமரசன்மார்க்கம் 4. ஏகானமவாதம்

33. திருக்கைலாய பரம்பரை சந்தானகுரவரில் ஒருவர்,
    1. மாணிக்கவாசகர் 2. பெரியானைக்குட்டி சுவாமிகள்
    3. திருஞானசம்பந்தர் 4. மறைஞான சம்பந்தர்

34. சித்தாந்த அட்டகம் என அழைக்கப்படும் எட்டு நூற் தொகுதியின் ஆசிரியர்,
    1. உமாபதி சிவாச்சாரியார் 2. மெய்கண்ட தேவர்
    3. சிவஞானபோதகம் 4. மறைஞான சம்பந்தர்

35. சாதகன் இறைவனை ஆண்டானாகப் பாவித்து அன்பு செய்து வழிபடும் மார்க்கம்
    1. தாசமார்க்கம் 2.சற்புத்திரமார்க்கம் 3. சன்மார்க்கம் 4. சகமார்க்கம்

36. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது,
    1. தருமபுர ஆதீனம் 2. மெய்கண்டார் ஆதீனம் 3. திருவாடுதுறை ஆதீனம் 4. நல்லை ஆதீனம்

37. சைவத்திருமுறைகள் பன்னிரண்டுக்கும் இலக்கணம் போன்று பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு விளங்கும் சாத்திர நூல்
    1. திருமந்திரம் 2. சிவஞானபோதம் 3. சிவஞானசித்தியார் 4. திருவருட்பயன்

38. சைவநெறியானது,
    1. வாழ்க்கைவேறு சமயம் வேறு என்கிறது
    2. வாழ்கையோடு இணைந்ததுதான் சமயம் என்கிறது
    3. சமயப்பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளிக்கின்றது
    4. பிற்போக்குச் சக்திகளை வளர்க்கின்றது

39. முதலை விழுங்கிய பிராமணப்பிள்ளையை முதலை வாயினின்றும் மீட்டுக் கொடுப்பதற்காக சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய பதிகம்
    1. ஏற்றேன் மறக்கேன்
    2. பிழையுள பொறுத்திடுவீர்
    3. தம்மானை அறியாத சாதியர் உளரோ
    4. தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்

40. கோயிற் திருவிழாக்களில் கொடியேற்றம் குறித்து நிற்பது,
    1. காத்தல் 2. அழித்தல் 3. மறைத்தல் 4. அருளல்

# மைதானப் பாதுகாப்புக்கு நாள்தோறும் 4 கோடி



(லண்டன்)

ஒலிம்பிக் மைதானங்களைப் பாதுகாப்பதற்கு மட்டும் தினந்தோறும் 4 கோடி ரூபா (இந்திய ரூபா) செலவு செய்து வருகிறது இங்கிலாந்து.

லண்டனில் அடுத்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகிறது. இதற்காக மைதானங்கள் தயார் செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை கூடைப்பந்து, நீச்சல் உள்ளிட்ட 5 மைதானங்களின் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன.

இங்கு பயங்கரவாதத் தாக்குதலோ அல்லது வேறு அசம்பாவிதச் சம்பவங்களோ நடைபெற வாய்ப்பு இருப்பதால் மிகப்பெரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக தினந்தோறும் 4 கோடி செலவிடப்பட்டு வருகிறது என்று த டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் இந்த மைதானங்களின் பாதுகாப்புச் செலவை கடந்த ஆண்டோடு ஒப்பிடும் போது இப்போது மும்மடங்காக அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

# அரையிறுதியில் பெடரர்

(லண்டன்)

ஏ.டி.பி. உலக இறுதி ரென்னிஸ் போட்டியின் அரை இறுதியில் விளையாட முன்னணி வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) தகுதி பெற்றார். 'பி' பிரிவில் நடந்த லீக் ஆட்டத்தில் ரபேல் நாடாலுடன் (ஸ்பெயின்) மோதிய பெடரர் 6-3, 6-0 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இந்த வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட பெடரர் ரென்னிஸ் வாழ்க்கையில் இந்த வெற்றியும் சிறப்பான வெற்றி என்றும், சிறந்த ஆட்டத்திறனுடன் உள்ளமையால் கிண்ணத்தை வெல்ல முழு அளவில் போராடுவேன் எனத் தெரிவித்தார்.

மற்றொரு லீக் ஆட்டத்தில் பிரான்ஸ் வீரர் ஜோ வில்பிரைடு சோங்கா 7-6 (7-4), 6-1 என்ற நேர் செட்களில் மார்டி பிஷ்ஷை (அமெரிக்கா) வீழ்த்தினார்.

இதேவேளை, இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே காயம் காரணமாக விலகினார். டேவிட் பெர்ரருடனான லீக் ஆட்டத்தின்போது அவர் காயம் அடைந்தார். இதனால், முர்ரேவுக்குப் பதிலாக உலகின் 9ஆவது இடத்திலுள்ள ஜென்கோ திப்சாரெவிச் (செர்பியா) எஞ்சியுள்ள 'ஏ' பிரிவு லீக் ஆட்டங்களில் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த வீரர் விருது




சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச் 2011 ஏ.டி.பி. தொடருக்கான சிறந்த வீரர் விருதை தட்டிச் சென்றார். இந்த ஆண்டில் இதுவரை ஜோகோவிச் 70 வெற்றி, 4 தோல்வி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முதல் நிலை வீரருக்கான கிண்ணத்தைப் பெற்றது குறித்து ஜோகோவிச் கூறுகையில், மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தருணம் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவம் நீண்ட நாள் கனவு நனவாகி உள்ளது என்றார்.

# ஓய்வுபெறும் எண்ணமில்லை

(சிட்னி)



அவுஸ்ரேலிய அணியில் நான் தொடர்ந்து விளையாட விரும்புகிறேன் என ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

எனது ஆட்டத்தை எப்போதும் அனுபவித்து விளையாடுகிறேன். தற்போதைய அணியில் இடம் வகிப்பதை சிறப்பு வாய்ந்ததாக கருதுகிறேன். இந்த அணியில் தொடர்ந்து நீடித்து, சில தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். எனது பணியை சிறப்பாகச் செய்தால், தொடர்ந்து வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 37ஆவது வயது பிறக்க உள்ள நிலையில் அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்று அவுஸ்ரேலிய முன்னாள் வீரர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர். இதனால் மிகுந்த நெருக்கடிக்குள்ளான பொண்டிங், தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு தாயகம் திரும்பிய நிலையிலேயே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**விளையாட்டு நெறிகளைக் கடைப்பிடிக்கும் சிறந்த வீரருக்கான ஸ்டீபன் எட்பர்க் விருது மற்றும் ரசிகர்களின் அபிமான வீரர் விருது என 2 விருதுகளை நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் தட்டிச் சென்றார். லண்டனில் நடக்கும் ஏ.டி.பி. ரென்னிஸ் உலக இறுதிச் சுற்று ரென்னிஸ் போட்டியின் போது, களத்திலேயே இந்த விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.**

# தேசிய கரப்பந்து; மாகாண ரீதியில் ஏற்பாடுகள் பூர்த்தி

27 ஆவது இளைஞர் சேவை- ரூபவாஹினி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது சகல மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி பியும் பெரேரா தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் இணைந்து வருடாந்தம் நடத்திவரும் இச்சுற்றுப் போட்டி இவ்வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் 25 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் நடத்தப்படும் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் வீரர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தகைமை பெறுவதுடன் தேசிய மட்டப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிபெறும் அணிகளுக்கும், வீரர்களுக்கும் பெறுமதி வாய்ந்த பரிசுகளும், விருதுகளும் வழங்கப்படும் எனவும் இறுதிப் போட்டிகள் ரூபவாஹினியில் நேரடியாக ஒளிபரப்பப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கைநழுவிய சாதனை

(மும்பை)

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் 166 ஓட்டங்களைப் பெற்ற டரன் பிராவோ பிரையன் லாறாவின் சாதனை ஒன்றைச் சமன் செய்யும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுள்ளார்.


அதாவது லாரா தனது 13ஆவது டெஸ்டில் இங்கிலாந்துக்கு எதிராக 167 ஓட்டங்கள் எடுத்தார். இதே போன்று தனது 13ஆவது டெஸ்டில் ஆடிய பிராவோ, அதை விட ஒரு ஓட்டம் குறைவாக எடுத்து ஆட்டமிழந்து விட்டார். அத்துடன் 13 டெஸ்டுகளில் லாரா மொத்தம் 1108 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இந்த வகையிலும் பிராவோ ஒரு ஓட்டம் குறைவாக உள்ளார்.

லாறாவின் பாணியில் விளையாடி வரும் பிராவோ, அவரது நெருங்கிய உறவினர் ஆவார். 2ஆவது நாள் ஆட்டம் முடிந்த பின்னர் பிராவோ கூறும் போது, மேலும் ஒரு ஓட்டம் எடுத்திருந்தால் லாராவின் சாதனையை சமன் செய்திருப்பேன்.

ஆனால் லாறாவின் சாதனையை சமன் செய்யும் திட்டத்துடன் நான் விளையாடவில்லை. சிறப்பாக விளையாடி எனது அணிக்காக சதம் அடித்திருக்கிறேன். தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு அணியின் வெற்றிக்குத் துணை புரிவேன் என்றார்.

# இந்தியா நிதான ஆட்டம்

(மும்பை)



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியும் நிதானமான ஆடி வருகின்றது.

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி மும்பையில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 590 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிராவோ 166, பவல் 81, சாமுவேல்ஸ் 61 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஷ்வின் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடி வரும் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை மூன்று விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆட்டமிழக்காது சச்சின் 67, லக்ஸ்மன் 32 ஓட்டங்களைப் பெற்று களத்திலுள்ளனர். மற்றும் ராவிட் 81, கம்பீர் 66 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் டரன் சமி, சாமுவேல்ஸ், ராம்போல் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

இதேவேளை, இப்போட்டியில் 23 ஓட்டங்களை ராவிட் பெற்ற வேளை டெஸ்ட் அரங்கில் 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராவிட்டுக்கு விருது

(முப்பை)

2010/11 ஆண்டின் இந்தியாவின் சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ராகுல் டிரா விட்டுக்கு (38) பெருமை மிகு பொலி உம்ரிகர் விருது வழங்கப்படவுள்ளது. சென்னையில் அடுத்த மாதம் 10ஆம் திகதி நடக்கும் கிரிக் கெட் சபையின் விருது வழங்கும் விழாவில், அவருக்கு விருதுடன் 5 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். ராவிட் நடப்பு ஆண்டில் இதுவரை 15 டெஸ்டில் 1258 ஓட்டங்கள். (சராசரி: 53, சதம் 6) விளாசி உள்ளார்.

# இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

தென்னாபிரிக்காவுக்கு எதிராக டிசம்பர் 15 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ள .டெஸ்ட் போட்டித் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை டெஸ்ட் அணி விவரம் டில்சான் (கப்டன்), மத்யூஸ் (துணைக் கப்டன்), பரனவிதான, சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, சந்தி மால், கௌஷல் சில்வா, திரிமன்ன, திமுத் கருணா ரத்ன, வெலகெதர, டில்ஹார பெர்ணான்டோ, நுவான் பிரதீப், சுரங்க லக்மல், திஷரா பெரேரா, அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத்.

# பாகிஸ்தான் வெற்றி

(அபுதாபி)

அபுதாபியில் நடைபெற்ற இலங்கை அணியுடனான ஐந்தாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது. இதன் மூலம் பாகிஸ்தான் அணி 4-1 விகிதத்தில் தொடரைக் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 218 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார 78, மத்தியூஸ் 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சொஹைல் தன்வீர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மிஸ்ப உல் ஹக் 66, கம்ரன் அக்மல் 61 ஓட்டங் களைப் பெற்றனர்.பந்து வீச்சில் ஜீவன் மெண்டிஸ் 3, டில்ஹார பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக உமர் அக்மலும், தொடர் நாயகனாக அப்ரிடியும் தெரிவானார்கள்.

# ஸ்பெயின் முதலிடம்

(ஜூரிஜ்)

சர்வதேச கால்பந்து சம்மேளன (பிபா) தரவரிசையில் உலகச் சம்பியனும், ஐரோப்பிய சம்பியனுமான ஸ்பெயின் கால்பந்து அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான நட்பு ரீதியிலான கால்பந்துப் போட்டியில் தோற்றாலும், ஸ்பெயினின் தரவரிசையில் எவ்வித மாற்றமும் இல்லை. அதேநேரத்தில் இங்கிலாந்து அணி 2 இடங்கள் முன்னேறி 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. நெதர்லாந்து அணி 2ஆவது இடத்திலும், ஜேர்மனி 3ஆவது இடத்திலும், உருகுவே 4-ஆவது இடத்திலும் உள்ளன. 6ஆவது இடத்தில் பிரேசிலும், 7 மற்றும் 8ஆவது இடத்தில் முறையே போர்த்துகல், குரேஷிய அணிகளும் உள்ளன. ஆசியாவின் முன்னணி அணியான ஜப்பான் 19ஆவது இடத்தில் உள்ளது.

# ஆசிரியர் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் அணிக்கும், யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கால்பந்துப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரியில் இப்போட்டி நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆரம்பத்தில் இருந்து சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் அணி ஆதிக்கம் செலுத்தி வந்தது. இறுதியில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மத்தியஸ்தர் சபை அணிக்கு கோல் போடும் பல வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் சென் ஜோன்ஸ் அணியின் கோல் காப்பாளாரின் சாதுரியமான தடுப்பினால் பயனளிக்கவில்லை. வருடா வருடம் இப்போட்டி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# முல்லைப் பெரியாறில் புதிய அணைக்கட்டு முடிவெடுக்க ஜெயலலிதாவிற்கு அழைப்பு

(திருவனந்தபுரம்)

முல்லைப் பெரியாறில் புதிய அணைக் கட்டு கட்டுவது குறித்து முடிவெடுக்க, தமிழக முதல்வர் ஜெயலலிதா பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டும் என, கேரள மாநில நீர்வளத்துறை அமைச்சர் ஜோசப் அழைப்பு விடுத்துள்ளார்.

கேரளா இடுக்கி மாவட்டத்தில், தமிழக - கேரள எல்லையை ஒட்டி, முல்லைப் பெரியாறு அணைக்கட்டு உள்ளது. இதிலிருந்து பெறப்படும் நீர், தமிழகத்தில் எட்டு மாவட்டங்களில் விவசாயம், மின்சார உற்பத்தி, குடிநீர் ஆதாரம் ஆகியவற்றிற்கு 116 ஆண்டுகளாக பயன்பட்டு வருகிறது. ஆனால், 116 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்வணைக்கட்டு உறுதியற்று இருப்பதாகவும், அணை உடைந்தால் கேரளாவில் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 30 இலட்சம் பேர் பாதிக்கப்படுவர் என, கேரள அரசு அஞ்சி வருகிறது. மேலும், தற்போதுள்ள அணையை அகற்றிவிட்டு அங்கு புதிய அணை கட்டவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுகுறித்து உயர் நீதிமன்றில் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நிலையில், அணைக்கட்டு பகுதியில் சமீபத்தில் இரு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனால், அணைக்கட்டில் சில இடங்களில் புதியதாக விரிசல்களும், நீர்கசிவும் ஏற்பட்டுள்ளதாக கேரள மாநில பொதுப் பணித் துறையினர் தெரிவித்தனர்.

இந்தச் சூழலில், தற்போதுள்ள அணையை அகற்றிவிட்டு, புதிய அணை கட்டுவது குறித்து உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என, கேரள மாநில நீர் வளத்துறை அமைச்சர் ஜோசப் கூறி வருகிறார். மேலும் தற்போதுள்ள அணையை அகற்றிவிட்டு, புதிய அணை கட்டப்பட வேண்டும. தமிழக அரசு பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டும் இதற்காகத் தமிழக அரசின் எந்த கோரிக்கையையும் ஏற்கத்தயார். தற்போது தமிழகத்திற்கு வழங்கப்படும் அதேஅளவு நீர் வழங்கப்படும் என, கேரள அரசு உறுதி அளிக்கும். அதற்கான எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திட, கேரள அரசு தயாராகவே உள்ளது. இதற்காக நமது அண்டை மாநிலம் கவலைப்படத் தேவையில்லை, எனத் தெரிவித்தார்.



# முல்லைப் பெரியாறு அணை விவகாரம் ஜெயலலிதா மன்மோகனுக்கு கடிதம்

(சென்னை)

முல்லைப் பெரியாறு அணை விடயத்தைப்பயன்படுத்தி அரசியல் ஆதாயத்துக்காக மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்த வேணடாம் என்றும் கேரள அரசிடம் தெரிவிக்குமாறு, பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் ஜெயலலிதா கடந்த புதன்கிழமை கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார். மேலும் அக்கடிதத்தில்,

முல்லைப் பெரியாறு அணை மிகவும் பாதுகாப்பானது என்று டில்லி உச்ச நீதிமன்றம் 2006இல் வழங்கிய தீர்ப்பில் தெளிவாகக் கூறிவிட்டது. முல்லைப் பெரியாறு அணைக்கு நில அதிர்வு காரணமாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக உள்ளது என்றும் அதில் 142 அடி வரை நீரைச் சேமிக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அந்த இடத்தில் புதிய அணையைக் கட்ட வேண்டும் என்று கேரள அரசு கூறி வருகிறது.

கேரள மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்த அந்த மாநில அரசு தீவிரமாகச் செயற்படுகிறது. தமிழக அரசும் முல்லைப் பெரியாறு அணையை நல்ல நிலையில் வைத்திருப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல்!

குடித்து விட்டு வருபவர்களை பிரம்பால் அடிக்க வேண்டும் என்றும் பொது மக்கள் முன்அவமானப்படுத்த வேண்டும் என சமூக சேவகர் அன்னா ஹசாரே கூறியிருந்தார். இந்தக் கருத்துக்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் ரஷத் ஆல்வி கூறுகையில், ஹசாரேவன் கருத்து சட்டம் ஒழுங்கை பொது மக்கள் கையில் எடுத்துக்கொள்ளலாம் என்ற வகையில் உள்ளது. இது போன்ற நடவடிக்கைகளினால ஜனநாயகம் பலவீனப்படும் எனக் கூறினார்.

# ஐ.நா.வின் கூட்டுக்கண்காணிப்பு அமைப்பின் பொறுப்பினை ஏற்கின்றது இந்தியா

(நியூயோர்க்)

ஐ.நா.வின் கூட்டுக் கண்காணிப்பு அமைப்பு (ஜே.ஐ.யூ) தேர்தலில் இந்தியா வெற்றி பெற்றது. ஐ.நா.வின் அதிகாரமிக்க அமைப்பாகக் கருதப்படும் கூட்டுக் கண்காணிப்பு அமைப்புத் தேர்தலில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா வெற்றி பெற்றுள்ளது. முன்னதாக, இந்த அமைப்பில் 1968 முதல் 1977 வரை பதவி வகித்தது.

இத் தேர்தலில் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஏ.கோபிநாதனும், இந்தியாவுக்கான சீன தூதர் ஷாங்யானும் போட்டியிட்டனர். இத்தேர்தலில் மொத்தம் உள்ள 183 வாக்குகளில் ஏ.கோபிநாதன் 106 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். ஷாங்யான் 77 வாக்குகளைப் பெற்றார்.

ஐ.நா.வின் நிர்வாக, நிதிச் செயற்பாடுகளை மேம்படுத்தும் பணியை செய்கிறது இந்தக் கூட்டுக் கண்காணப்பு அமைப்பு. ஐ.நா.வின் நிர்வாக, நிதிச் செயற்பாடுகள் குறித்து திடீர்ச் சோதனை, ஆய்வு செய்ய இந்த அமைப்புக்குத் தன்னிச்சையான முழு அதிகாரம் உண்டு. இந்த அமைப்பில் பதவி வகிக்கும் சீனாவின் பதவிக் காலம் 2012 டிசெம்பரில் முடிவடைகிறது. இதைத்தொடர்ந்து 2013 ஜனவரி முதலாம் திகதி இந்தியப் பிரதிநிதி ஏ.கோபிநாதன் பதவியேற்றுக் கொள்வார்.




# இந்தியாவை பிடிக்காது

(நியூயோர்க்)



மும்பைத் தாக்குதல் வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டு அமெரிக்கச் சிறையில் இருக்கும் டேவிட் கோல்மென் ஹெட்லி, தனக்கு நாடு என்ற அடிப்படையில் தனக்கு இந்தியாவைப் பிடிக்காது என்று அவரிடம் விசாரணை மேற்கொண்ட இந்திய விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்தார். ஆனால் இந்திய உணவும், இந்தியர்களும் பிடித்தமானவை என்றும் ஹெட்லி தெரிவித்துள்ளார்.

இதுபோலவே, மும்பைத் தாக்குதல் சம்பவங்களை தனது மனைவி ஃபெய்ஸாவுடன் தொலைக்காட்சியில் பார்த்ததாக செபாஸ்டியன் ரோடெல்லா என்ற புலனாய்வுப் பத்திரிகையாளரிடம் ஹெட்லி தெரிவித்துள்ளார்.

மேலும், மும்பைத் தாக்குதல் சம்பவங்களைத் தொலைக்காட்சியில் பார்த்த தனது பாகிஸ்தானிய மனைவி ஷாசியா, தாக்குதல் சம்பவங்களை நாள் முழுவதும் தொலைகாட்சியில் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அதற்காகத் தன்னை அவர் பாராட்டியதாகவும் ஹெட்லி மேலும் தெரிவித்ததாக தெரிய வந்துள்ளது.

மும்பையில் தாக்குதல் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும்போது அதுகுறித்து சாஜித் மிர்-தாக்குதல் சம்பவத்துக்கான சதிகாரர்களில் ஒருவர்-தனக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# மக்களை மறந்த தலைவர்கள்

உத்திரப்பிரதேச முதல்வர் மாயாவதியும், முன்னாள் முதல்வர் முலாயம்சிங் யாதவும், பெரிய தலைவர்களான பின், மக்களை மறந்து விட்டனர். மககளின் கஷடங்களை இவர்கள் உணர்வதில்லை. பல்வேறு திட்டங்களின் கீழ் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்கும் நிதியெல்லாம், அமைச்சர்களின் கைக்குச் செல்கிறது என, காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஐந்து நாள் சுற்றுப் பயணம் மேற கொண்டுள்ள காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல், நேற்று முன்தினம் நடந்த பொதுக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். மேலும் விவசாயிகள் ஆதாயம் அடைவதை சமாஜ்வாடி கட்சியினரும், மற்றவர்களும் விரும்பவில்லை. மாநிலத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி, மாயாவதி கவலைப்படுவதே இல்லை. நான் மருத்துவமனை ஒன்றுக்கு விஜயம் செய்தேன். அங்கே நோயாளிகளே இல்லை, தாதியர் இல்லை. வைத்தியர்கள் இல்லை. ஆனால், வண்ணம் பூசும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. மாயாவதி அங்கு விஜயம் செய்வதால, வண்ணம் பூசும் வேலைகள் நடப்பதாக, அங்கிருந்த பெயிண்டர்கள் தெரிவித்தனர்.

தேசிய ஊரக வேலைவாயப்பு உத்தரவாதத் திட்டம், சர்வ சிக்ஷா அபியான், தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் உட்பட பல திட்டங்களின் மூலம், உத்திரப்பிரதேசக்கு மத்திய அரசு நிதி அளித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிதி எல்லாம், மாநில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் கைக்குச சென்று கொண்டிருக்கிறது. போட்ட மூன்று மாதத்தில், இங்கு சாலைகள் மிகமோசமாக சேதமடைந்து விடுகின்றன. இவ்வாறு ராகுல தெரிவித்தார்.

# தைப்பொங்கலுக்குப் புதிய கட்சி

(பண்ருட்டி)



பா.ம.க.விலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ. வேல்முருகன், புதிய கட்சி தொடங்குவதற்கான பூர்வாங்கப் பணி மும்மரமாக நடந்து வருகிறது. பா.ம.க.வில் இருந்து நீக்கப்பட்ட பண்ருட்டி முன்னாள் எம். எல்.ஏ. வேல்முருகன், வரும் ஜனவரி மாதம் பொங்கலுக்குள் புதிய கட்சியைத் தொடக்குவேன் என அறிவித்துள்ளார். மேலும் பா.ம.க.,வில் 80 சத வீதம் பேரின் ஆதரவு உள்ளது எனக் கூறி, புதிய கட்சி தொடங்வதற்கு தமிழகம் முழுவதும் உள்ள தனது ஆதரவாளர்களைத் திரட்டி வருகிறார்.

பா.ம.க.விற்கு தைலாபுரம் தோட்டம் போல் தனது ஆதரவாளர்களைச் சந்திப்பதற்காக கடலூர் மாவட்டம், குள்ளஞ்சாவடி அடுத்த புலியூர் கிராமத்தில், புலியூர் தோட்டம் உருவாக்கி வருகிறார். அவருக்குச் சொந்தமான நிலத்தில் உருவாகி வரும் இந்தத் தோட்டத்தில், பெரிய பந்தல் மற்றும் தகடுகளால் ஆன “ஷெட்” அமைக்கும் பணி மும்மரமாக நடந்து வருகிறது. தன்னை சந்திக்க வரும் ஆதரவாளர்களை இங்கு சந்தித்து வருகிறார். மேலும் அவர்களுக்கு தடபுடலாக விருந்தும் அளித்து வருகின்றார்.

# திரிபுரா மாநிலத்திற்கு சர்வதேச விருது

ஹோமியோபதி மருத்துவத்தில் சிறந்து விளங்கியதற்காக திரிபுரா மாநிலத்திற்கு சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியத் தலைநகர் புதுடில்லியில் 2011 ஆம் ஆண்டுக்கான மருத்து உலகக் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் டெலி-ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை முறையை மேம்படுத்தும் நோக்கில் செயற்பட்ட திரிபுரா மாநிலத்திற்கு சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது. இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் சர்வதேச விருது பெறும் முதல் மாநிலம் திரிபுரா என்பது குறிபபிடத்தக்கது.


## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்




வளமுடன்

வாழ



வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இஸ்லாமிய வங்கிகளுக்கு வட்டி விகிதம் நிர்ணயிப்பு

உலகச் செய்திகள்




சர்வதேச இஸ்லாமிய வங்கிகளுக்கு வட்டி விகிதம் முதல் முறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச சராசரி இலாபம் ஈட்டும் வகையில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இஸ்லாமிய வங்கியின் 18ஆவது ஆண்டு மாநாடு பஹ்ரைனில நடைபெற்றது. இம்மாநாட்டில் 16 இஸ்லாமிய வங்கிகள் பங்கேற்றன. வங்கிகளிடையே நிதி உதவி அளித்துக் கொள்வதற்கு வசதியாக வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. அதிக முதலீட்டு நிதியுடன் செயற்படும் இஸ்லாமிய நிதித்துறை ஆண்டுக்கு 15 சதவீத வளர்ச்சியை எட்டி வருகிறது. வழக்கமான வங்கிகளின் செயற்பாடுகளிலிருந்து முற்றிலுமாக விலகி தனித்துவத்துடன் இஸ்லாமிய வங்கிகள் செயற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவிற்கு புதிய பாக். தூதர்



மறைந்த முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோவின் நெருங்கிய சகாவும், முன்னாள் செய்தித் துறை அமைச்சருமான ஷெர்ரி ரெஹ்மான், அமெரிக்காவுக்கான புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் பிரதமர் யூசுப் ரஸா கிலானியால் முறையாக அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த இவர், ஊடகங்களைக் கையாள்வது தொடர்பாக கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சில காலத்துக்கு முன் தனது அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்தார்.

இருப்பினும் கட்சித் தலைமையுடன் நீடித்த தொடர்பில் இருந்து வந்தது, இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடனான உறவில் ஆக்கபூர்வமான பங்களிப்பை அளித்தது ஆகியவை காரணமாக இப்போது தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக, அமெரிக்க இராணுவத்தின் முன்னாள் தளபதி மைக் முல்லனுக்கு ரகசியக் கடிதம் எழுதியதாக எழுந்த பிரச்சினையையடுத்து, அமெரிக்காவுக்கான தூதராக இருந்த "ஹசைன் ஹக்கானி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்தே ஷெர்ரி அமெரிக்காவுக்கான புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவுடனான உறவை வலுப்படுத்த அதிபர் ஜர்தாரி விரும்புவதன் அடிப்படையிலேயே ஷெர்ரியின் நியமனம் நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகின் இறுதி நாள் என்பது உண்மை?

அமெரிக்காவின் இறுதிநாள் தீர்க்கரான ஹேரால்டு கேம்ப்பிங், ஒக்டோபர் 21 உலகத்தின் இறுதிநாள் என்று தெரிவித்தார். இந்தக் கூற்றில் உண்மை இருக்கலாம் என்று நம்பும் வகையில் பெருவெள்ளம் வந்து பல நகரங்களை நீரில் மூழ்கடித்தது.

இன்றைய நவீன காலத்திலும் பெரிய நகரங்களான பாங்கொக், ரோம், ஜெனோவா போன்றவை வெள்ளத்தில் மூழ்கி ஏரிகளாகக் காட்சியளிக்கின்றன. இது குறித்து பெர்ன் பல்கலைக் கழகத்தின் NCCRd; (National Centre of Competence in Research) இயக்குநர் ஹேன்ஸ் ஹர்னி பேசும்போது, 'நகரங்களின் பெருவளர்ச்சியில் அவசரகாலத் திட்டத்தை யாரும் கண்டுகொள்வதில்லை' எனவே வெள்ளம் வரும் நாட்களில் விரைவாகத் தண்ணீரை வடியச் செய்ய வாய்ப்புகள் இல்லை.

லிகுரியக் கடற்கரையில் பன்னிரெண்டு மணிநேரத்தில் 350 மி.மீ மழை பெய்தது. இது ஆண்டு மழையின் அளவில் மூன்றில் ஒரு பங்காகும். ஜெனோவாவின் தெருக்கள் அனைத்தும் பெருகி வரும் ஆற்றுவெள்ளம் போல் காட்சியளித்தன. ரோம் மற்றும் பாங்காக் நகரங்கள்



ஒக்டோபர் 20 அன்று பெருமழை காரணமாக நீரில் மிதந்தன. ஹர்னி இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது, இவை மலையடிவாரத்திலும் கடற்கரையருகிலும் இருக்கின்றன. அதனால் மழை வெள்ளப் பெருக்குக்கு தப்ப இயலாது. நகர மேம்பாடு என்பது பாதுகாப்பு நடவடிக்கைகளை உட்படுத்தியதாக இருக்க வேண்டும் என்றார்.

# பொலிவியாவில் நிலநடுக்கம்

(லா பாஸ்)

தென் அமெரிக்க நாடான பொலி வியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது. பொலிவியாவின் வடக்குப் பகுதியான பெனிக்கு 37 மைல் தொலைவில், பூமிக்கு 533 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானதாக அமெரிக்க நில அளவையியல் துறை தெரிவித்தது. ரிக்டர் அளவு கோலில் 6.2 அலகுகளாக இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையமும் இதனை உறுதிப்படுத்தியது. பொலிவியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் அருகிலுள்ள நாடுகளான பெருவிலும், சிலியிலும் உணரப்பட்ட தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# '3 ஏ' தகுதியை இழக்குமா பிரான்ஸ்?

ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான பிரான்ஸ் நாட்டில் தொடர்ந்து கடன்சுமை அதிகரிப்பதாலும், பொருளாதார வளர்ச்சி குறைவதாலும் அத்ன் '3ஏ' தகுதியை இழந்துவிடும் அபாயத்தில் இருக்கிறது.

பொது நிதிப் பற்றாக்குறையும் மற்ற ஐரோப்பிய நாடுகளின் கடனால் வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பும் பிரான்ஸ் நாட்டின் '3ஏ' தகுதியைக் காப்பாற்ற இயலாமல் தடுக்கின்றன. இன்னும் மூன்று மாதத்தில் இந்த நிலை ஏற்படும் என்று மூடிஸ் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. பல தொழில் முதலீட்டாளர்கள் பிரான்சின் '3ஏ' தரம் குறைந்து வருவதை ஊகித்ததால் அடுத்த ஆண்டில் பொருளாதார நெருக்கடி தோன்றும் என்று கருதுகின்றனர்.

# கூடாரம் அமைக்காமல் போராட்டம் நடத்த அனுமதி




கனடா முழுக்க ஆக்கிரமிப்பாளர் போராட்டம் எந்த இடத்திலும் கூடாரம் அமைக்காமல், நள்ளிரவுக்கு மேல் தங்காமல் அதிகாலை 5 மணி முதல் தங்கள் போராட்டத்தை நடத்தலாம் என்று அதிகாரிகள் அனுமதி வழங்கினர். அரசு பொது இடங்களை இளைஞர்கள் ஆக்கிரமிப்பதை எதிர்த்து நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற முயல்கின்றது. ஆனால் நீதிபதி இதற்கு மறுத்துவிட்டார். கியூபெக் நகரத்தில் கூடாரமிட்டவர்களை அதிகாலையில் சென்ற காவல்துறையினரும், தீயணைப்பு படையினரும் வெளியேற்றினர்.

கனடாவில் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புப் போராட்டங்களை இளைஞர்கள் நடத்துகின்றனர். இவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடாரங்களை உடனடியாக காலி செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

இருள் கவ்விய இரவு, அலைகளின் ஆவேசம், அழுத்தும் சுழல்கள். கரையினில் மகிழ்ந்து நிற்பவர், அறிவரோ எங்கள் அல்லலை.

– ஹாஃபிஸ

மனித மனம் நூற்றாண்டுகளாகவே சகமனிதன் மீது எல்லையற்ற வன்முறையைச் செலுத்தி அதில் உற்சாகம் காண்பதற்கு மட்டுமே பழக்கப்பட்டிருக்கிறது.

– எஸ்.ராமகிருஷ்ணன்

எல்லா குற்றங்களுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது மனிதன் நேசிக்கப்படாமல் போனதே.

– டொஸ்ரோயெவ்ஸ்கி

மௌனம் என்பது ஒரு சாதுர்யம். நாம் யார் என்பதை மறைத்துக்கொள்வதற்கான முகமூடி. மௌனமாக இருப்பவர்கள் எதற்காகவும் எந்த விலையும் செலுத்த வேண்டியதில்லை. யாருக்கும் விளக்கமளிக்க வேண்டியதில்லை. அபிப்பிராயங்கள் இல்லாமலிருப்பது அல்லது அபிப்பிராயங்களுடன் மௌனமாக இருப்பது என்பது ஒரு சௌகர்யமான ஏற்பாடு. இந்த சௌகர்யம் நம்மை அழிப்பவர்களைப் பாதுகாக்கிறது. நம்மையும் கொஞ்சம் பாதுகாக்கிறது.

– மனுஷ்யபுத்திரன்

பத்தாயிரம் பேருடைய மௌனத்திலும் பார்க்க ஒருவருடைய குரல் சத்தமாக ஒலிக்கும். – நெப்போலியன்

அசாதாரணம் தொடங்குவதும் முடிவடைவதும் அறியாமலே நடந்து விடுகிறது. மிஞ்சுவதெல்லாம் அதைப் பற்றிய ஞாபகங்கள்தான். – அசோகமித்திரன்

அதிகாரத்திற்கு எதிரான மனிதனின் போராட்டம் என்பது ஞாபகமறதிக்கு எதிராக நினைவுகளின் போராட்டமே.

– மிலன் குந்தேரா

பசித்தழும் ஒரு குழந்தைக்குச் சோறு போட நான் ஒரு மாளிகையை தகர்ப்பேன். ஒரு மனிதனின் தாகத்தைத் தணிக்க நூறு ஆலயங்களை இடிப்பேன். இதுதான் எனது தத்துவம். இது கற்குகைக்குள் ஒடுங்கி, பெற்ற ஞானமல்ல. விகாரங்களில் சொற்களை வாரியிறைத்து அடைந்ததும் அல்ல ஒரு வேளைச் சோற்றுக்காக சகோதரன் கழுத்தை அறுக்கத் தயங்காத மனிதர்களின் கண்களிலிருந்துதான் என் மெய்ஞானத்தைக் கற்றேன். தாயைப் பிள்ளைக்கும் மனைவியை கணவனுக்கும் எதிரியாக ஆக்கும் மாபெரும் அடிவயிற்று நெருப்பிலிருந்து நான் அறிந்தது என் விவேகம். பிரபஞ்சம் எப்படி உருவானால் என்ன? எந்த நியதிகளினால் அது இயங்கினால் என்ன? எப்படி அழிந்தாலென்ன? இந்த உலகம் மாயையென்றால் பசியும் மாயையா? பசியை அன்னம் தவிர வேறு எதுவும் தணிக்காது. நீங்கள் பேசிய அனைத்துக்கும் மறுதரப்பு சொல்லப்பட்டது. இந்த உண்மைக்கு மட்டும் மானுடகுலத்தில் எங்கும் மறுதரப்பு கிடையாது.

– ஜெயமோகன் விஷ்ணுபுரம் நாவலில்

பசிக்கிறது எனச் சொல்ல செம்மொழியானாலென்ன? கம்பளியானாலென்ன?

– யுகபாரதி

பல்வேறு வகையான மக்களை, ஒரே மாதிரியாகப் பசியில் வைத்திருக்க வேண்டும். பசியின் உந்துதல் அதிகரிக்கும் போது, தனித்தனியான இயல்புகள் மறைந்துவிடும். அவர்களிடத்தில் ஒரே மாதிரியான ஒரு உணர்வு தோன்றும்.

– சிக்மண்ட் ஃப்ரெய்ட்

நமது வேலை உலகத்தைப் புரிந்துகொள்வது அல்ல, அதை மாற்றியமைப்பதுதான். – கார்ல் மார்க்ஸ்

வாதிட்டு வெல்லாத தத்துவங்கள் வாள் கொண்டு களமேறி வெல்லுமாயின் நீதிக்குக் காலேது? – கண்ணதாசன்

அற்பத் தனங்களை அகங்காரத்தால் எதிர்கொள்கிறேன்.

– ஜெயகாந்தன்

உங்களுக்கு உரியது உங்களுக்குத் தரப்படாவிட்டால், உங்களுக்கு உரியதையும் கொடுத்து விடுவதுதான் உயர்ந்த எதிர்ப்பு.

– காந்தி

அறிவு தனது விஷக்கொடுக்கைத் தனக்கெதிராகத் திருப்பியாக வேண்டும். – நீட்ஷே

இயற்கைக்கு முன்னே எல்லா உயிர்களும் சமம்.


– புத்தர்

மலைகள் நீந்துகின்றன. நதிகள் சலனமற்றிருக்கின்றன. – ஸென் கவிதை

நீர்வீழ்ச்சி விழுந்து கொட்டிய பின்தான், ஆறாகி அடங்குகிறது. – எஸ். வைத்தீஸ்வரன

நெஞ்சு பதைபதைக்கிறது, யாரேனும் அருவியை நீர்வீழ்ச்சி என்று சொல்லிவிட்டால். – விக்ரமாதித்யன்

# முன்னேஸ்வரம் மிருகபலி வேள்வி வழக்கு; ஆட்சேபனை மனுத்தாக்கலுக்கு அனுமதி



(கொழும்பு)

சிலாபம் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் மிருகபலி வேள்வியை தடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பிரதிவாதிகள் ஆட்சேப மனுக்களை தாக்கல் செய்வதற்கு ஜனவரி 30 ஆம் திகதிவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது

நீதிபதி டபிள்யூ.எல். ரஞ்சித் சில்வா, முன்னிலையில் இம்மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது

சிறிபோதிராஜ மன்றம், ஜாதிக சங்க சம்மேளனம், தர்மவிஜய மன்றத்தின் தலைவர் ஒல் கொட் குணசேகர, வண பண்டிருப்புவே வினீதா தேரர், மிருக நலன்புரி நம்பிக்கை நிதிய தலைவர் ஜராங்கனி டி சில்வா அதன் பொருளாளர் விசாகா திலகரட்ன, இலங்கை மிருக பாதுகாப்புச் சங்கத்தின் உபதலைவர் லோரின் மார்கரெட் பார்தோலோமஸ், இலங்கை மிருக பாதுகாப்பு சங்கத்தின் செயலாளர் ஷிராமினி தேசிறி ரட்னாயக்க சத்வ மித்ர தலைவர் சாகரிகா ராஜகருணாநாயக்க மற்றும் மேலும் ஐவர் இம்மனுவை தாக்கல் செய்திருந்தனர்


இக்கோவிலில் மிருக பலி கொடுப்பதற்கு வருடாந்த அல்லது தற்காலிக அனுமதிப்பத்திரமோ அல்லது வேறு வகையான அனுமதியோ வழங்கக்கூடாது என சிலாபம் நகர சபைக்கும் அதன் தலைவருக்கும் உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரியிருந்தனர்

பொலிஸ் மா அதிபர், புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபர், சிலாபம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சிலாபம் பொலிஸ் பொறுப்பதிகாரி, சிலாபம் நகர சபை, அதன் தலைவர், சிறிபத்திரகாளி அம்மன் கோவில் தர்மகர்த்தாக்கள் எம்.கனகரட் னம், காளிமுத்து சிவபாக்கிய சுந்தரம், மஹேந்திர சாமி, அகில இலங்கை இந்து காங்கிரஸ் தலைவர், சட்டமா அதிபர் ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்

மனுதாரர்கள் சார்பில் சி.ஆர்.டி சில்வா, சுரேன் டி சில்வா, ஆர்.ஜே.டி சில்வா, டுலான் வீரவர்தன ஆகியோர் ஆஜராகினர்

ஆலயத்தின் தர்மகர்த்தா சிவபாக்கிய சுந்தரம் சார்பில் மொஹான் பாலேந்திராவின் நெறிப்படுத்தலில் எஸ்.சிவராசா, ஏ.ஆர்.சுரேந்திரன், வி.புவிதரன் ஆகியோரும் தர்மகர்த்தா மஹேந்திர சாமியின் சார்பில் சிறிநாத் பெரேரா, நெவில் டி சில்வா, என். காண்டீபன் ஆகியோர் ஆஜராகினர். அகில இலங்கை இந்து காங்கிரஸ் சார்பில் என். நீலகண்டன் ஆஜராகியிருந்தார் வழக்கை நிராகரித்த நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# கொரியாவில் பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நிதி ஒதுக்கீடு



(கொழும்பு)

கொரியாவில் பணியாற்றிய இலங்கையர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளை துரிதமாக வழங்க, கொரியா 36 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கொரிய தேசிய ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்த இலங்கையர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

கொரிய ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி சியோங் ஹுன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் நிஷ்ஷங்க என். விஜயரட்ன ஆகியோர், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

கொரியாவின் தேசிய ஓய்வூதிய சம்பள சபையின் தகவல்களின்படி, 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள், இதற்கு உரிமை கோருகின்றனர். இதனூடாக, கொரியாவில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள சுமார் 20 ஆயிரம் பேர், நன்மையடைவார்கள் என, அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்று சென்றுள்ளோருக்கு கிடைக்கும் ஓய்வூதியம் தொடர்பாக, அவர்களுக்கு போதிய தெளிவு இல்லாத காரணத்தினால், சில இலங்கையர்கள் அந்த ஓய்வூதிய திட்டத்தில் இணைந்த போதும், சேவையை பூர்த்தி செய்து வரும்போது, அந்த ஓய்வூதியத்தை பெறுவதற்கு, விண்ணப்பித்திருக்கவில்லை. அமைச்சும், இந்நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர், அந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன். 36 மில்லியன் அமெரிக்க டொலர், இதனூடாக, இலங்கைக்கு கிடைக்கின்றது. இலங்கை திரும்பி அவர்கள் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றார்.

# பாரத லக்ஷ்மன் கொலை தொடர்பாக தகவல்களை வெளியிடமுடியாது



(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை அது குறித்த தகவல்களை வெளியிட முடியாதென பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார் இந்த விசாரணை தொடர்பான தகவல்களை வெளியிட முடியாதென வும், நீதிமன்ற உத்தரவிற்கு அமைய குற்றத் தடுப்பு பிரிவினர் செயற்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

விசாரணைகள் முன்னெடுக்கப்படும் முறை தொடர்பாக கூறுவது கடினமான விடயமாகும் என்றும், விசாரணையின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை கைதுகள் தொடர்பான தகவல்களை வெளியிட முடியாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்

## ஊடகவியலாளர்கள் நன்றி

2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் ஊடகவியலாளர்களின் நலன்களை பேணுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி ஒதுக்கீடு செய்துள்ளமைக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் நன்றிதெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் மீரா . எஸ் இஸ்ஸதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

ஊடகவியலாளர்கள் மீது அக்கறை கொண்டு அவர்களின் நலன்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத் தக்கதாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# அரசாங்க வைத்தியசாலைகளில் தகவல்களை அறிய புதிய திட்டம்

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் பற்றிய தகவல்களை உடனடியாக அறிந்து கொள்ளக்கூடிய வகையில் விசேட திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அரச தகவல் மையத்தின் ஊடாக இந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

1919 என்ற விசேட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் தினங்கள், அவற்றுக்கான வைத்தியர்கள் மற்றும் அந்தந்த வைத்தியசாலைகளுக்கே உரித்தான சிகிச்சை முறைகள் தொடர்பான தகவல்களை மக்கள் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

Ministry of Health Sri Lanka

முதல் கட்டமாக கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் இரண்டாம் கட்டமாக தேசிய வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை பலவற்றின் சேவைகள் குறித்து தகவல்களை, அரச தகவல் மையத்தின் ஊடாக பொது மக்கள் அறிந்துகொள்வதற்கு வசதிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரணத்தை ஏற்படுத்தும் பரசிட்டமோல்




அளவுக்கதிகமாக பரசிட்டமோல் வலி நிவாரணி மருந்தை உட்கொண்டுவருபவர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் உடலில் தேங்கும் அந்த மருந்தின் அளவு அதிகமாகி உயிரிழப்பு ஏற்படக் கூடும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.படிப்படியாக உடலில் சேர்ந்தாலும்கூட மருந்தின் அளவு கூடிப்போய் மரணம் ஏற்படலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய ஆண்டுகளில் 150க்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறாக உயிரிழந்திருப்பதை எடின்பர்க் நகர மருத்துவமனைகள் பதிவுசெய்துள்ளன என்று அந்நகர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.ஒரு நபர் உட்கொள்வதற்குரிய அளவை விட சற்று கூடுதலான அளவில் பரசிட்டமோல் மருந்தை உட்கொள்கிறோம் என்பதை பலர் உணராமலேயே இருந்துவிடுகின்றனர் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு தடவையில் மருந்தின் அளவு கூடிப்போவதை கண்டுபிடிப்பதென்பதைவிட படிப்படியாக உடலில் மருந்தின் அளவு கூடிப்போவதை கண்டுபிடிப்பது சிரமமான விடயமாகவே இருந்து வந்துள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# தேங்கியிருந்த அடையாள அட்டைகளை துரிதமாக விநியோகிக்க நடவடிக்கை



(கொழும்பு)

தபால் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக விநியோகிக்க முடியாமல் தேங்கியிருந்த தேசிய அடையாள அட்டைகளை தபால் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. தொழிற்சங்க நடவடிக்கையினால் சுமார் 30 ஆயிரம் அடையாள அட்டைகள் தேங்கியிருந்ததாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

இவற்றில் 15 ஆயிரம் அடையாள அட்டைகள் கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உரியவை என்றும் அவர் கூறினார். இந்த வாரத்திற்குள் அடையாள அட்டைகள் உரியவர்களைச் சென்றடையும் என நம்புவதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெறுவதில் தாமதம் நிலவுமாயின் 0112 585 043 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறு திணைக்களத்தின் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கிராமத்திற்கு ஓர் வீடு என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கட்டப்பட்ட ஐந்து வீடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன. மன்னார் நானாட்டன் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முருங்கன் மாளிகைப்பிட்டியில் அமைக்கப்பட்ட வீட்டினை வன்னி மாவட்ட நாடாளுன்ற உறுப்பினர் பாரூக், திறந்துவைப்பதைக்காணலாம்.

# யாழில்.போலி சிகரட் விற்பனை பொலிஸாரிடம் இருவர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

போலியான சிகரட் வகைகள் யாழ்.நகரப் பகுதியில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கிறது. இவ்வாறான மோசடியில் ஈடுபட்ட இருவர் யாழ்.பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

சுமார் 200 பொதிகளில் போலி சிகரட்டுக்களைத் தம் வசம் வைத்திருந்தார்கள் என்றும் போலி 'சிகரட்டுக்களை யாழ்.நகரப் பகுதியில் விற்பனை செய்தார்கள் என்றும் இந்த இருவர் மீதும் யாழ். பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ்.நீதவான் நீதிமன்றினால் இவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இது போன்ற சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த யாழ்.பொலிஸார் தொடர்ந்தும் தீவிர தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(எஸ்)

## ரத்வத்த...

1994ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்த ஜெனரல் அனுருத்த ரத்வத்த புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுப்பதில் தீவிர முனைப்புக் கொண்டிருந்தார். இவர் மாவனல்லை தொகுதியில் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் லூகே ரத்வத்தையின் மகனாவார். இவரின் மகன் லொஹான் ரத்வத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளமை குறிப்பிடத்தக்கது

## ஆணைக்குழுவின்....

வெளியிடப்பட்டதன் பின்னர் கருத்து வெளியிட உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடமும் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் கலந்து கொண்ட போது தாம் இதனைக் குறிப்பிட்டதாக கெவின் ரொட் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய நல்லிணக்கத்தை...

போரின் போது படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் ஆனால் இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச தலையீடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் பத்தாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் நாற்பதினாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கின்றனர். இன்னும் சிலர் இப்போரின் போது கொல்லப்பட்டவர்கள் இத்தொகையை விட அதிகம் எனக் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் இத்தரவுகள் எல்லாம் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்பதை நான் உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் கொல்லப்பட்ட அல்லது காணாமற் போனவர்களின் எண்ணிக்கையை கண்டறிவதற்காக கணக்கெடுப்பு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இக்கணக்கெடுப்பை வடபகுதியிலுள்ள அரசாங்கத்தின் அதிகாரிகள் மேற்கொண்டு போரின் போது கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன நபர்கள் குறித்த விபரங்களை பெறவுள்ளனர்.

இக்கணக்கெடுப்பு முடிவுற்றதும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஆய்வுக்குப் பின்னர் அது தொடர்பிலான விபரங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போரின் போது கொல்லப்பட்டவர்கள் எவ்வாறு, எச்சந்தர்ப்பத்தில், எந்தத் தரப்பில் கொல்லப்பட்டார்கள் என்பதை வகைப்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு கொல்லப் பட்டவர்களில் படைத் தரப்பினரால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது. இத்தகைய மரணங்கள் தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுகளுக்கு படைத்தரப்பு பதிலளிக்கத் தயாராகவுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கையை கண்டறியும் நோக்குடனேயே இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முதலாவது நடவடிக்கையாக போரின் போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும், படைத்தரப்பினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் இந்த கணக்கெடுப்பு உதவியாக அமையும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரின் போது பொதுமக்களுக்கு எந்த உயிரிழப்பும் ஏற்படக்கூடாது என்ற கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்திருந்தது.

ஆனால், பொதுமக்களை மனித கேடயங்களாகப் பாவித்த புலிகளுடனான இப்போரின் போது பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

இலங்கையில் முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கள் இந்த கொடிய போரை தங்களது சொந்த அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தினர். இதனால் சுமார் 7 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் சுமார் இரண்டு அரச தலைவர்கள், 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். ஆனால் இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச தலையீடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான சூழ்நிலையில் 3,173 குடும்பங்கள் மாத்திரமே இன்னும் மீளக்குடியேற்றப்படவுள்ளனர். இவர்கள் அனைவரும் மிக விரைவில் குடியமர்தப்ப டுவார்கள்.

சுமார் 100,000க்கும் மேற்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மிக விரைவாக மீள்குடியேற்றியுள்ளோம். சுமார் 11,000 முன்னாள் புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இவர்களில் 700 பேரை இன்னும் விடுதலை செய்ய வேண்டியுள்ளது. இவர்கள் அனைவரும் இந்த வருட இறுதிக்குள் விடுதலை செய்யப்படுவார்கள்.

இலங்கை நாகரீகமானதும், பெருமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டதுமான ஒரு இறைமையுள்ள நாடு. இந்நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது எப்படி என்பது தொடர்பில் எந்தவொரு வெளிநாட்டு வழிகாட்டுதலும் எமக்குத் தேவையில்லை என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிறுவனங்களின்...

பேரவை, பனை அபிவிருத்திச்சபை, வடகடல் சீநோர் நிறுவனங்கள், கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவற்றினது தலைவர்கள் பொது முகாமையாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்தோரிடம் நடப்பாண்டில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் அடுத்த வருடம் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தேசிய வடிவமைப்பு நிலையம் சார்பாக அதன் தலைவர் ஜனதா மார்சல் தேசிய அருங்கலைகள் பேரவை சார்பாக அதன் தலைவர் புத்தி கீர்த்தி சேன, பனை அபிவிருத்திச் சபை சார்பாக அதன் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடகடல் நிறுவனம் சார்பாக அதன் தலைவர், பரந்தாமன் கைத்தொழில் அபிவிருத்தி சபை சார்பாக அதன் தலைவர் உதயசிறி காரியவசம் ஆகியோர் தத்தமது நிறுவனங்களினது செயற்றிட்டங்கள் தொடர்பில் இதன் போது விளக்கமளித்தனர்.

நடப்பாண்டு மட்டுமல்லாமல் 2012 ஆம் ஆண்டு குறித்த நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் அந்தந்த நிறுவனங்களினது நவீனத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் நடப்பாண்டில் மேற்படி நிறுவனங்கள் சார்ந்த உற்பத்திகள் விற்பனைகள் கண்காட்சிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்திய அமைச்சர் அடுத்தாண்டு ஒவ்வொரு நிறுவனங்களும் மக்களுக்கான சேவைகளைக் கருத்திற் கொண்டு தமது பணிகளை முழுமையாகவும் திறமையாகவும் முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலில் பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் இணைப்பாளர் செல்வி தங்கேஸ்வரி, ஆலோசகர் திருமதி. வி.ஜெக ராசசிங்கம் ஆகியோருடன் அமைச்சின் துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்

## தேசிய....

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கலந்து கொள்ளவுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் கொழும்பு சர்வ தேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைக ளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நல்லிணக்கம் தொடர்பான தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நல்லிணக்கம் மற்றும் சர்வதேச சமூகம் எனும் கருப்பொருளில் உரையாற்றிய அவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இவ் வறிக்கை மக்கள் ஆவணமாக மாற்றப்படும்.

இந்த ஆவணத்திற்கு சர்வதேச நாடுகள் அதிக முக்கியத்துவம் வழங்கின. 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரிலும் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்பிக்கப்படும்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக சமூகத்துடன் இணைந்து செயற்பட நாங்கள் தயாராகவுள்ள போதிலும், அவர்கள் சொல்வதை கேட்க வேண்டும் என எதிர்பார்க்கும் அவர்கள், நாங்கள் சொல்வதையும் கேட்க வேண்டும்.

அதேபோன்று, உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் பொறிமுறைக்கும் அவர்கள் மதிப்பளிக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் மாநாட்டில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்படும்.

இதனையடுத்து, குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலான விடயங்களை ஆராயும் என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற...

இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கும்படி அரசியல் கட்சிகளிடம் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது

19 ஆளும் கட்சி உறுப்பினர்களையும், 12 எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் கொண்டதாக இந்தத் தெரிவுக்குழு அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன், ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கும் தலா ஒரு இடம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஒதுக்கப்படவுள்ள நிலையில். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 4 ஆசனங்கள் ஒதுக்கப்படவுள்ளன

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காணும் வகையிலும், எல்லா இன மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையிலும் அரசியல் அமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற தெரிவுக் குழு ஆறு மாதங்களுக்குள் பரிந்துரைகளை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகளை இவ்வருட இறுதிக்குள் முடிவுக்கு கொண்டுவர எண்ணியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதுவரை 13 சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ள நிலையில், அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5, 6, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடத்த இருதரப்பினரும் இணக்கம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது


## கிணற்றில்...

கிணற்றில் மிதப்பதைப் பெற்றோர் கண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து சிறுவனின் சடலத்தை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர்.

(எஸ்)

செய்திப்பாணம்

**ஊடகவிய லாளர்களுக்கு உண்டுவட்டி இல்லாக்கடன்**
**காடகந்தேடு மூத்தபிரஜை கனதிப்பணம் - மாடதாக**
**உழைத்தவர் ஓய்வூதியம் உயர்வதோடு பாதுகாப்பு**
**திளைப்பும் பில்லியனாத் திறை!**




## தமிழர் புனர்வாழ்வுக்....

விஜேசுந்தர தெரிவித்தார். அன்றைய தினம் விசாரணைக ளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக் குமாறும், அவர் உத்தரவிட்டார். தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்கு கிடைத்த நிதியை, புலிகள் இயக்கத்தின் ஆயுத கொள்வனவுக்கு பயன்படுத்தியதாக, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு எதிராக, குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டராசிரியர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாதுள்ள யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து வடமாகாண ஆளுநரின் அலுவலகம் முன்பாக நேற்றைய தினம் ஒரு மணி நேரம் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்.மாவட்டத்தில் 2007, 2009 ஆம் ஆண்டுகளில் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கல்வியமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் கிடைக்கப்பெறாத சுமார் 52 வரையான தொண்டராசிரியர்களே கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு நேற்று முற்பகல் 11.15 மணியளவில் தொண்டராசிரியர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது யாழ்.மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவரை வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவன் தொடர்புகொண்டு போராட்டக்காரர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு வலியுறுத்தியதுடன், யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கு இனிமேல் நியமனம் வழங்கப்படமாட்டாது எனவும் தெளிவுபடத் தெரிவித்தாகவும் யாழ்.மாவட்ட தொண்டராசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இருந்தும் தொண்டராசிரியர்கள் தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.

ஆளுநர், கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் கொழும்பு சென்றிருப்பதாகத் தெரிவித்த பொலிஸார் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு ஒத்துழைப்புத் தருவதாகவும், அதனை வேறு ஒரு தினத்தில் நடத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

பொலிஸாரின் கூற்றை செவிமடுத்த தொண்டராசிரியர்கள் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை ஒரு மணி நேரத்துடன் நிறுத்தி நண்பகல் 12.15 மணியளவில் அங்கிருந்து அகன்று சென்றனர். அதிகாரிகள் யாழ். திரும்பியதும் தமது போராட்டத்தைத் தொடரவுள்ளதாக தொண்டராசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்கள் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை நேற்று முற்பகல் 10.00 மணியளவில் யாழ்.ஆரிகுளம் உயர் கலைக் கல்லூரியில் நடத்தினர். அங்கு யாழ். மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் கடந்த 22 ஆம் திகதி தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனத்தை வலியுறுத்தும் சந்திப்பு ஒன்றினை வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவனுடன் நடத்தியதாகவும், அச்சந்திப்பில் யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களின் நியமனங்கள் 2007, 2009 ஆண்டுகளில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளின் பிரகாரம் வழங்கப்பட்டு விட்டதாகவும், அத்துடன் யாழ். மாவட்ட தொண்டராசிரியர்கள் நியமனம் முடிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருப்பதாகத் தெரிவித்தார். (பா)

## சைக்கிள் திருடர்கள் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

மிக நீண்டகாலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுவந்த இருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் குறித்த பகுதியில் சைக்கிள் ஒன்றினை திருட முற்படும்போது கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் 34,35 வயதுடையவர்கள் எனவும், இவர்களால் திருடப்பட்ட பல சைக்கிள்கள் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருவதுடன், இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸ் தரப்பால் கூறப்பட்டது. (எப்.எஸ்)

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வலிப்பு நோய் காரணமாக அருகில் இருந்த கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய், சுதுமலை வடக்கைச் சேர்ந்த அல்பிரட் அன்ரன் பாலேந்திரா (வயது - 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு, யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா விசாரணை மேற்கொண்டபின், நேற்று மாலை உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (எப்.எஸ்)

# பல்கலை மாணவன் விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், பிறவுண் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - இருசக்கர உழவு இயந்திர விபத்தில் பல்கலைக்கழக மாணவன் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று இரவு 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் பகுதியை தற்காலிக முகவரியாகக் கொண்ட பிரநந்தன் (வயது - 27) என்பவரே காயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞன் எதிரே வந்த இருசக்கர உழவு இயந்திரத்துடன் மோதுண்டுள்ளார். தலை மற்றும் தோள் பட்டையில் காயமடைந்து தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி இளைஞர் யாழ். பல்கலைக்கழகத்தில் 4 ஆம் வருட இறுதி ஆண்டு மாணவனாக நாடக அரங்கில் துறையில் கல்வி பயில்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)


## பதவி வெற்றிடம்

கணக்குப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை : க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியலில் விசேட சித்தியுடன் வர்த்தகம் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை : 25 - 50 வருடங்கள்

ஏனைய தகைமைகள் : ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், மேற்கூறப்பட்ட பதவிக்கான முன் அனுபவம் மற்றும் கணினி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடையோர் சுய விபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை 30.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு காரியாலயம்,
இல: 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (இ)


# கணினி கோளாறால் கப்பல் சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல்சேவை தொடங்கப்பட்ட ஐந்து மாதங்களில் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்ற ஸ்கொட்டியா பிரின்ஸ் கப்பல் மீண்டும் திரும்பி வரவில்லை என்று தூத்துக்குடி துறைமுக அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

போதிய வருமானம் இல்லாமை மற்றும் பயணிகள் குறைவாக இருப்பதாலேயே கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இது தொடர்பாக கப்பல்சேவையை நடத்தும் பிளெமிங்கோ நிறுவனத்தினர், பயணிகள் முன்பதிவுக்கான கணினி மென்பொருளில் கோளாறு ஏற்பட்டுள்ளதாலேயே சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

இந்த தொழில்நுட்பப் பிரச்சினை தீர்க்கப்பட்டதும் விரைவில் கப்பல் சேவை மீளத் தொடங்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சம்பூரில் ஆசிரியை கொலை ஆபரணங்களும் அபகரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - சம்பூர் பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை பாடசாலைக்குச் செல்லும் வழியில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆசிரியை கூரிய ஆயுதம் ஒன்றினால், தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவரது தங்க ஆபரணங்கள் பறித்து செல்லப்பட்டு உள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும், கொலையுடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் சம்பூர் பொலிஸார் கூறியுள்ளனர்.

# குடாநாட்டில் பரவலாக மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்று பெய்த கனமழையினால் அனைத்து பிரதேசங்களிலும் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ். நகரப் பகுதி, தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் உள்ளிட்ட குடாநாடு தழுவிய ரீதியாக பல இடங்களில் இடைவிட்டும், தொடர்ச்சியாகவும் கடும் மழை பெய்தது.

இவ்வாறு பெய்த கடும் மழையினால் வீதிகளை மேவி வெள்ளம் பாய்ந்ததுடன், பல இடங்கள் வெள்ளம் தேங்கிய நிலையில் காணப்பட்டன. இந்நிலையினால் தோட்டப் பகுதி, வயல் நிலங்கள் நீரில் மூழ்கியதுடன், போக்குவரத்திலும் ஸ்தம்பித நிலை ஏற்பட்டது.

தொடர்ச்சியான மழை வீழ்ச்சியினால் பல இடங்களில் வீதிகள் மோசமாக சேதமடைந்ததுடன், குண்டும் குழியுமாக காட்சியளித்தது. பல பிரதேசங்களில் உள்ள சிறிய குளங்களிலும் நீர் நிரம்பிக் காணப்பட்டது.

அத்துடன் யாழ். நகர புறநகர் பகுதிகளான கொட்டடி, சோனக தெரு, பொம்மைவெளி உள்ளிட்ட தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளம் தேங்கியதனால் அங்கு வசிக்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். பலரின் வீடுகளில் வெள்ளநீர் உட்புகுந்தமையினால் உறவினர் வீடுகள் மற்றும் பள்ளிவாசல்களில் தங்கியுள்ளனர்.

# பரிசுத்த பண்டம் இன்று மன்னாருக்கு

(கொழும்பு)

புனித டொன் பொஸ்கோவின் பரிசுத்த பண்டம் இந்தியாவிலிருந்து கடந்த 19 ஆம் திகதி காலை 7 மணியளவில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. குறித்த பண்டம் (திருக்கரம்) இன்று மன்னாருக்கு கொண்டுவரப்படுகின்றது.

இன்று மதியம் 1.00 மணிக்கு மடு சந்திக்கு கொண்டு வரப்படும். பின் மாலை 2.00 மணிக்கு மன்னார் முருங்கன் டொன் பொஸ்கோ மண்டபத்தில் வைக்கப்படும். மாலை 6.00 மணிக்கு மன்னார் செபஸ்தியார் பேராலயத்திற்கு கொண்டுவரப்பட்டு இரவு திருவிழிப்பு இடம் பெறும்.

நாளை காலை 6.00 மணிக்கு செபஸ்தியார் பேராலயத்தில் திருப்பலி இடம்பெறும். பின் காலை 10 மணிக்கு வவுனியா தூய அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

# பாதுகாப்பாளர்களாக மாறி வரும் இராணுவம்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் தவிர எவரும் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. இராணுவம் தற்போதைய நிலைமையில் சண்டையிடுபவர்கள் என்ற ஸ்தானத்திலிருந்து பாதுகாப்பாளர்கள் என்ற இடத்தை அடைந்து கொண்டிருக்கிறது என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

சர்வதேச கற்கை நெறிகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று நடைபெற்ற போருக்குப் பின்னரான நல்லிணக்கம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கில் இராணுவம் என்ன செய்கிறது எனக் கேட்கிறார்கள். மக்களிடம் இராணுவம் தொடர்பாகக் காணப்பட்ட தோற்றப்பாட்டை மாற்றி வருகிறோம். தற்போதைய நிலைமையில் மக்கள் எம்மை பாதுகாப்பாளர்களாகப் பார்க்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் தவிர எவரும் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. இராணுவத்தினரின் ஆயுதங்கள் ஒரு போதும் பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படமாட்டாது.

யாழ்ப்பாணத்தில் 99.3 வீதமான பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. பெரும்பாலும் இராணுவமே இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தது என அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.